# ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி

## பொன் விழா ஆண்டு 1974 – 2024

# ஐம்பதாவது கல்லூரி நாள் விழா அறிக்கை

ஏலம் மணக்கும் போடி மாநகரத்தில் அமைந்திருக்கும் நமது ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரியின் **ஐம்பதாவது கல்லூரி நாள் விழா** இறைவனுடைய அருளாசியுடனும் உங்களது நல்லாசியுடனும் மிகச் சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

ஏல விவசாயிகள் சங்கத்தின் தலைவரும் உண்மை, உழைப்பு, உயர்வு என்று சிகரம் தொட்ட எங்கள் கல்லூரியின் தலைவரும், இவ்வினிய விழாவிற்கு தலைமை ஏற்று சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் **உயர்திரு.S.V.சுப்பிரமணியன்** அவர்களே! கல்லூரியின் வளர்ச்சிக்கு உற்ற தோழனாக இருக்கும் உபதலைவர் **உயர்திரு.S.இராமநாதன், M.A.,** அவர்களே! எண்ணியதை எண்ணியது போன்று செயல்படுத்தும் கல்லூரியின் செயலர் **உயர்திரு.R.புருஷோத்தமன், M.A.,B.Ed.,** அவர்களே!

இமயம் போல் வளரும் நம் கல்லூரிக்குத் தூண்களாக விளங்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களே மரியாதைக்குரிய பொதுக்குழு உறுப்பினர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஏல விவசாயிகள் சங்க நிர்வாகிகளே

பெற்றோர்களே, விருந்தினர்களே, துணை முதல்வர் அவர்களே, பேராசிரியப் பெருமக்களே, கண்காணிப்பாளர்(பொ), அலுவலக நண்பர்களே, நமது கல்லூரியின் அருமை செல்வங்களாம் முன்னாள் இந்நாள் மாணவ, மாணவிகளே நமது கல்லூரியின் **ஐம்பதாவது கல்லூரி நாள்** விழாவைச் சிறப்பிக்க வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவரையும் இருகரம் கூப்பி வரவேற்று **2023 - 2024** கல்வியாண்டிற்குரிய ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கும் இத்தருணத்தில் முதற்கண் நமது கல்லூரியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் மற்றும் சாதனைகளைப் பட்டியலிடுகிறேன்.

**கல்லூரியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் மற்றும் சாதனைகள்:**

**1. கல்லூரி வளர்ச்சி பணிகள் :**

50வது ஆண்டு பொன்விழா துவக்கத்தை முன்னிட்டு நமது கல்லூரியில் மினி மராத்தான் போட்டி போடிநாயக்கனூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து கல்லூரி வரை நடைபெற்றது.

50வது பொன்விழா ஆண்டை முன்னிட்டு கல்லூரி நுழைவு வாயில் புதுப்பிக்கும் பணிகள் துவங்கி முடிவடையும் நிலையில் உள்ளது. புதிதாக Hotel மற்றும் ATM கல்லூரி நுழைவாயில் அருகில் கட்டப்பட்டு வருகிறது.

நமது கல்லூரியில் நூலக கட்டிடத்தின் மேல் தளத்தில் 66KW Solar Energy (On Grid) மின்சக்தி தயாரிப்பதற்கான வேலைகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

மேலும் கல்லூரியின் அனைத்து கட்டிடங்களுக்கும் மின்சார விநியோகம் சீராகாவும், போடி நகர விநியோக மாற்றம் செய்யப்படுவதற்கான மின்சார பணிகள் திருத்தியமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வரும் 2024 ஆம் கல்வியாண்டு முதல் மாணவ, மாணவியர்கள் தங்களுடைய கல்விக் கட்டணங்களை இணையவழியில் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மண்வளத்தை பாதுகாக்கவும், இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் நமது கல்லூரியில் முதன்முறையாக தாவரவியல் துறை மாணவர்கள் மற்றும் பேராசிரியர் முனைவர்.ஜெ.கிருஷ்ணகுமார் அவர்கள் இயற்கை முறையில் மண்புழு உரம் (Vermicompost) 256 KG தயாரித்து உள்ளனர்.

நமது கல்லூரியில் 12 நவீன வகுப்பறைகள் (Smart classroom) wifi, LCD Projector, Smart screen with computer அமைக்கப்பட்டுள்ளன.

நமது கல்லூரியில் அனைத்து துறைகளுக்கும் புதிதாக R.O Water பொருத்தப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் R.O குடிநீர் தொட்டிகள் அமைப்பிற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நமது கல்லூரியில் wifi வசதியுடன், கணினிகள் அனைத்து துறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நமது கல்லூரி வேலை வாய்ப்பு வழிகாட்டி மற்றும் பயிற்சி மையம், முத்தூட் பைனான்ஸ், டி.வி.எஸ்.ட்ரைனிங் அண்ட் சர்வீசஸ், ICICI வங்கிக்காக, கோவை Aquava Group, சென்னை Foxconn வேலை வாய்ப்பு முகாம் நடத்தியதில் தற்பொழுது

வரை இளநிலை மூன்றாமாண்டு மற்றும் முதுகலை இரண்டாமாண்டு பயிலும் மாணவர்கள் 145 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

இதனுடன் குறிஞ்சி டெக்னாலஜிஸ் என்ற நிறுவனத்திற்காக கணினி அறிவியல் பயிலும் துறைகளைச் சார்ந்த (B.Sc CS, BCA, B.Sc I.T, B.Sc CS (Data Science & Analytics) 37 மாணவர்கள் Technical Level final round முடித்து முடிவுக்காக காத்துக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்பத்துடன் இணைந்து 30.08.2023 முதல் 01.09.2023 முடிய அறிவியல் கண்காட்சி நமது கல்லூரி வளாகத்தில் மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. இதில் தேனி, போடி, ஆண்டிபட்டி சுற்றியுள்ள அரசு மற்றும் தனியார் பள்ளி, கலைக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி மாணவ மாணவியர்கள் 400 பேர் அறிவியல் கண்காட்சியில் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தனர். சுமார் 4000 பேர் பார்வையாளர்களாக பயன் அடைந்தார்கள்.

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் குரங்கனி பகுதி கிராமங்களில் "உணவு மற்றும் விவசாயம்" அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மையம் அமைப்பதற்காக 19.08.2023 அன்று ரூ.1,26,86,556/- திட்டம் செயல்படுத்த திட்ட அறிக்கை இந்திய அறிவியல் கழகத்திடம் (DST) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மதுரையில் உள்ள ஸ்ரீ விநாயகா கார்மெண்ட்ஸ், கவின் ஏகோ கீரின் ப்ரோடுக்ட் (Kavin Eco Green Products) கருச்சிபட்டி நிறுவனத்துடன் மற்றும் Kuriniji Technology solution Pvt Ltd உடன் MOU (Memorandum of understanding) போடப்பட்டுள்ளது.

கல்லூரி நூலகத்திற்கு என ஒரு இணையதளம் elibrary.cpacollege.org உள்ளது. ந-கற்றல் என்ற பகுதியில் புத்தகங்களும், ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களும் இணையவழி வீடியோக்களும் சேகரிக்கப்பட்டு உள்ளன. மேலும் மாணவர்கள் தங்களுடைய படைப்புகளையும் தாங்களே பதிவேற்றம் செய்யத்தக்க வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 2.கற்பிக்கப்படும் பாடங்களும் மாணவர்களின் எண்ணிக்கை :

நமது கல்லூரியில் இளநிலைப் பட்டவகுப்பில் வரலாறு, பொருளியல், ஆங்கிலம், கணிதம், வேதியியல், கணினி மற்றும் வணிகவியல் பாடங்களும் முதுநிலையில் கணிதம், மற்றும் வணிகவியல் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

வேதியியல்துறை, கணிதத்துறை, வணிகவியல்துறை, கணினி அறிவியல்துறை பல்கலைக்கழகத்தால் உயராய்வு மையமாக அங்கீகரிக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் நடந்தேறி வருகின்றன

சுயநிதிப்பிரிவின் கீழ் இளநிலைப்பட்ட வகுப்பில் B.C.A., B.Sc., (IT), B.B.A., B.Com (CA), B.A., Tamil, English, B.Sc(Physics), B.Sc (Botany), B.Sc(CS Data Science & Anayltics), முதுநிலையில் M.Sc., CS, M.Sc., Chemistry, M.A., English, M.Com (CA), M.A (History)

Ph.D.,Maths, Ph.D.,Chemistry, Ph.D.,Commerce பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

நூலக அறிவியலில் சான்றிதழ் பாடமும், வேதியியல் துறையில் பட்டய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

காந்தியச் சிந்தனை சான்றிதழுக்குரிய பாடமாகவும் (CGT) மற்றும் பட்டய பாடமாகவும் (DGT) கணினிப் பயன்பாடு இளநிலை (DCA) மற்றும் முதுநிலை (PGDCA) பட்டயப் பாடங்களாகவும் கற்பிக்கப் படுகின்றன.

அரசு உதவி பெறும் பிரிவுகளில் 841 மாணவ, மாணவியர்களும் சுயநிதிப் பிரிவுகளில் 666 மாணவ, மாணவியர்களும் ஆக மொத்தம் 1507 பேர் பயிலுகின்றனர்.

## 3. ஆசிரியர், அலுவலர்கள் எண்ணிக்கை:

நம் கல்லூரியில் அரசு உதவிப்பெறும் பிரிவுகளில் **51** பேராசிரியர்களும், **23** அலுவலர்களும், சுயநிதிப்பிரிவில் **54** பேராசிரியர்களும், **35** அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

இக்கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்கள் 40 பேர் முனைவர் பட்டம் பெற்றவர்கள். மீதமுள்ள அனைவரும் M.Phil./SET/NET படிப்பு முடித்து, Ph.D.,க்காக ஆய்வுப்பணியினை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அரசு உதவிபெறும் பிரிவில் பணிபுரியும் பேராசிரியர்கள் 14 பேர் இணைப்பேராசிரியர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

## 4. உள்தர மதிப்பீட்டு நிர்ணய மையம் (Internal Quality Assurance Cell-IQAC)

உள்தரமதிப்பீட்டுமையம் கல்லூரி முதல்வரைத் தலைவராகக் கொண்டு 2007-இல் தோற்றுவிக்கப்பட்டது. IQAC ன் Co-ordinator ஆக Dr.R.முருகேசன் அவர்கள் செயல்பட்டு வருகிறார். மேலும் NAACன் Co-ordinator ஆக Dr.K.கிருஷ்ணன்அவர்கள் செயல்பட்டு வருகிறார். இம்மையம் கல்லூரியின் ஒவ்வொரு துறையும் எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் நோக்கோடு தேசியதரமதிப்பீட்டுக் குழு (NAAC) பரிந்துரையின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இம்மையத்தின் பிரதானபணியானது கல்லூரியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு தேவையான உணர்வுள்ள, நிலையான மற்றும் வினைத்திறனுள்ளஅமைப்பை உருவாக்குவதாகும்.

இக்கல்வியாண்டில் முதலாமாண்டு மாணவர்களுக்காக "Student Induction Programme" 03.07.2023 முதல் 18.07.2023 வரை 3 நாட்கள் நடத்தப்பட்டது. இதன் ஒருங்கிணைப்பாளராக Dr.K.சிவா, Dr.S.செந்தில்குமார் மற்றும் R.அபிஷேக் அவர்கள் செயல்பட்டனர்.

24.08.2023 & 07.10.2023 ஆகிய நாட்களில் "NAAC Readiness: Empowering Faculty for Accreditation" என்னும் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி (FDP) நடத்தப்பட்டது.

இக்கல்வியாண்டிற்கான National Institutional Ranking Framework (NIRF) 2024 அறிக்கையை 30.01.2024 அன்று அரசு போர்டலில் (Portal) பதிவேற்றம் செய்யப்பட்டது.

உள்தர மதிப்பீட்டு மையம் மேற்பார்வையில் 22 துறைகள் மற்றும் இதர மையங்களின் தகவல்களை சரிபார்த்து 2021-2022 ஆண்டிற்கான Annual Quality Assurance Report (AQAR) அறிக்கையைத் தயாரித்து தேசிய தரமதிப்பீட்டுக் குழுவிற்கு (NAAC) 04.01.2024 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டது. மேலும் 2022 – 2023 ஆண்டிற்கான AQAR அறிக்கையைத் தயாரித்து தேசிய தர மதிப்பீட்டுக் குழுவிற்கு (NAAC) 24.01.2024 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டது.

ஆண்டுதோறும் உள்தர மதிப்பீட்டு மையம் மூலமாக All India Survey on Higher Education (AISHE) அறிக்கை, (asihe.gov.in) என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டிற்கான All India Survey on Higher Education (AISHE) அறிக்கை 07.03.2024 அன்று அரசு போர்டலில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

நம் கல்லூரியின் இணையதளம் இம்மையத்தின் மூலமாக, நம் கல்லூரியின் அன்றாட நிகழ்வுகளை கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 5. வேலைவாய்ப்பு வழிகாட்டி மற்றும் ஆலோசனை மையம் & CPAC IAS Academy (Career Guidance, Placement Cell)

ஜீன் 2023-ல் நமது கல்லூரியும் குறிஞ்சி டெக்னாலஜிஸ் போடிநாயக்கனூர் உடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதன் அடிப்படையில் கணினி அறிவியல் பாடப்பிரிவைச் சார்ந்த (B.Sc CS, BCA, B.Sc IT, B.Sc (CS Data & Analytics Science) 64 மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் 12 நாட்கள்

வழங்கப்பட்டது. இப்பயிற்சி வகுப்பில் 38 மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

04.07.2023 அன்று Faceprop என்ற நிறுவனத்தின் மூலம் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு Linkedin kick starters program என்னும் பொருண்மையில் ஒரு நாள் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி மூலமாக சுமார் 416 மாணவர்கள் பயனடைந்தனர். 13.07.2023 அன்று "பாதுகாப்பு துறையில் இருக்கும் வேலை வாய்ப்புக்கள்"என்ற நிகழ்வு அனைத்து துறை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்வானது நமது கல்லூரி என்.சி.சியுடன் இணைந்து ஒருங்கிணைக்கப்பட்டது.

CPAC IAS Academy சார்பாக போட்டித் தேர்வுக்கான பயிற்சி வழங்குவதற்காக மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டது. இதன் மூலமாக 49 மாணவர்கள் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் இவ்வமைப்பின் மூலமாக டி என் எஸ் யு ஆர். பி (TNSURB) போலீஸ் தேர்விற்கு விருப்பப்பட்ட 30 மாணவர்களுக்கு தேர்வை எதிர் கொள்வதற்கான பயிற்சி வழங்கப்பட்டது.

"Reaching the unreached"என்ற பொருண்மையில் 19.09.2023 அன்று அனைத்து துறை மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு குவிந்து கிடக்கும் பல்வேறு துறை வேலை வாய்ப்புகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

01.11.2023 அன்று நான் முதல்வன் திட்டத்துடன் இணைந்து லிங்கனின் கிக்ஸ் ஸ்டார்டர்ஸ் ப்ரோக்ராம் யை இரண்டாம் ஆண்டு மற்றும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வழங்கியது

நவம்பர் 6, 7, 8, 9 ஆம்தேதிகளில் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு "மென் திறன் பயிற்சி" வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை மாஸ்டர் டிரைனர்ஸ் - சென்னை உடன் இணைந்து நடத்தியது.

நவம்பர் 6,7,8 ஆகிய நாட்களில் "தேனி அறம் அகாடமி உடன் இணைந்து முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு "திறன் மேம்பாட்டு பயிற்சி" வழங்கப்பட்டது.

07.03.2024 அன்று கல்லூரி சுயநிதிப்பிரிவு நிர்வாக மேலாண்மையில் துறை (BBA) மற்றும் கணினி பயன்பாட்டு வணிகவியல் (B.Com CA) துறையுடன் இணைந்து SEBI இன் விழிப்புணர்வு நிகழ்வினை நடத்தியது.

07.03.2024 அன்று முதல் அரசு வேலை வாய்ப்பில் விருப்பமுள்ள மாணவர்கள் சுமார் 20 பேருக்கு குரூப் 4 பயிற்சி வகுப்பினை நடத்தி வருகிறது.

14.03.2024 ஆம் தேதி "ஜப்பானில் உள்ள வேலை வாய்ப்புகள் மற்றும் ஜப்பானிய மொழியின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் இணையவழி கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 40 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மார்ச் 19, 20, 21 2024 ஆகிய மூன்று நாட்கள் Barclays என்ற நிறுவனத்தின் சி எஸ் ஆர்காக புனேவைச் சார்ந்த ரூபிகான் என்ற நிறுவனம் வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிகழ்வினை விருப்பமுள்ள மூன்றாமாண்டு மாணவர்களுக்கு நடத்தியது.

27.03.2024 அன்று "முத்தூட் பைனான்ஸ்" என்ற நிறுவனம் கல்லூரியில் வளாக நேர்காணல் நடத்தியது. இதில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 46 மாணவர்கள் கலந்து கொண்டனர். அதில் 26 மாணவர்கள் தோந்தெடுக்கப்பட்டனர்.

01.04.2024 அன்று டி.வி.எஸ் ட்ரைனிங் சர்வீசஸ்(ICICI வங்கிக்காக வளாக நேர்காணல் நடத்தியது. இதில் சுமார் 120 மாணவர்கள் பங்கு கொண்டனர். மாணவர்களுக்கு வேலை சம்பந்தமாக உரை கொடுக்கப்பட்டது. அதில் 19 மாணவர்கள் விருப்பம் தெரிவித்தனர். நேர்காணல் மூலமாக 17 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## 6. கல்லூரித் தேர்வுகள்:

உயர் கல்வியில் பின் தங்கியுள்ள நமது பகுதியைச் சார்ந்த மாணவர்களின் கல்வித்தரத்தினை உயர்த்த இக்கல்லூரி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆசிரியர்களின் சீரிய முயற்சியினாலும் மாணவர்களின் கடின உழைப்பினாலும் இந்த கல்வியாண்டில் நடந்து முடிந்த பல்கலைக்கழக தேர்வுகளில் ஒரு சில பாடங்களைத் தவிர மற்ற அனைத்துப் பாடங்களிலும் 80 சதவீதத்திற்கு மேல் மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

நமது கல்லூரியில் CBCS என்னும் திட்டத்தின் அடிப்படையில் நடைபெறும் உள்மதிப்பீட்டு தேர்வுகளின் ஒருங்கிணைப்பாளராக (Co-ordinator for InternalExams) Dr. K. நித்தியானந்தகுமாரி, இணைப்பேராசிரியர் கணிப்பொறி அறிவியல்துறை அவர்கள் திறம்பட செயல்பட்டு வருகிறார். இணைக் ஒருங்கிணைப்பாளராக முனைவர்.ஜி.மங்கை நூலகர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

**7. Research Guidance:**

**மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு வழிகாட்டிகள்**

| Department | Name | Ph.D Pursuing | Ph.D submited | Ph.D awarded |
|---|---|---|---|---|
| Mathematics | Dr.K.Krishnan | - | - | 2 |
| | Dr.A.R.Manikandan | - | - | - |
| Commerce | Dr.S.Balamurugan | 4 | 1 | - |
| | Dr.A.Sujatha | 3 | - | - |
| | Dr.T.Ramalakshmi | 4 | - | - |
| Computer Science | Dr.S.Sivakumar | 3 | - | 3 |
| | Dr.R.Murugesan | 5 | - | 1 |
| Chemistry | Dr.G.Indira Mahalakshmi | - | - | - |
| | Dr.G.Ravindran | 3 | 1 | - |
| | Dr.R.Karthiga | 1 | - | - |
| | Dr.B.Kavitha | - | - | - |
| Botany | Dr.C.Gopi | - | - | - |
| English | Dr.C.Palanivelrajan | 4 | - | - |
| | Dr.B.Anandprasad | 4 | - | - |
| | Dr.V.Vimala | 2 | 1 | 1 |
| Economics | Dr.Senthilkumar | 2 | - | - |

கல்லூரியின் ஆராய்ச்சிக் குழுவின் முதன்மை நோக்கம் ஆராய்ச்சி சூழலை நிறுவுவதை ஊக்குவிப்பதாகும். நமது கல்லூரியில் 4 ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. மேலும் நமது கல்லூரியில் 16 ஆராய்ச்சி வழிகாட்டிகள் உள்ளனர். இந்த கல்வியாண்டில் புதிதாக Dr. R. Karthiga, Assistant Professor of Chemistry மற்றும் Dr. B. Kavitha, Assistant Professor of Chemistry (SF), Ph.D. Guideship பெற்றனர். இந்த கல்வியாண்டில் 35 பேர் Ph.D., பயின்று வருகின்றனர். 3 பேர் தங்களது Ph.D., அறிக்கையை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சமர்பித்தனர். மேலும் இந்த கல்வியாண்டில் 7 பேர் Ph.D., பட்டம் பெற்றனர். நமது கல்லூரியில் பணிபுரியும் 3 ஆசிரியர்கள் Ph.D., பட்டம் பெற்றனர். இந்த கல்வியாண்டில் நமது கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களின் புத்தகம் / புத்தகம் அத்தியாய வெளியீடுகளின் எண்ணிக்கை 6 மற்றும் ஆய்வுக் கட்டுரை வெளியீடுகளின் எண்ணிக்கை 30 ஆகும்.

2010-ம் கல்வியாண்டு முதல் பேராசிரியர்களின், ஆராய்ச்சி வழி காட்டுதலுக்கும் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகள் பிரசுரித்தமைக்கும் நமது கல்லூரி நிர்வாகம் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் தலா ரூபாய் 1000/- ரொக்கப் பரிசு அளித்து கௌரவிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் இந்த ஆண்டு நடைபெற்ற தேசிய மற்றும் மாநில அளவிலான கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர்.

## 8. TNSCST பயிற்சி முகாம் :

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் (TNSCST) தமிழ்நாடு அரசு மற்றும் ஏல விவசாயிகள் சங்க கல்லூரியும் இணைந்து பட்டியல் பிரிவு (SC) மற்றும் பழங்குடி பிரிவு (ST) மக்களுக்கான நலஅமைப்பு என்னும் திட்டத்தின் கீழ் மூன்று நாள் "கோழி வளர்ப்பு நேரடி பயிற்சி" இரண்டு முறை மற்றும் மூன்று நாள் "சுகாதார பொருட்கள் தயாரிபபு நேரடி பயிற்சி" நடைபெற்றது.

மொத்தம் 3 கட்டங்களாக 5 பயிற்சி முகாம்கள் நமது கல்லூரி வளாகம் மற்றும் தேனியில் உள்ள KVK CENDECT பயிற்சி வளாகத்தில் டிசம்பர் 2023 மற்றும் ஜனவரி 2024 மாதங்களில் நடைபெற்றது. தேனி மாவட்டத்தைச் சார்ந்த சுமார் 150-க்கும் மேற்பட்ட பயனாளிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

இதற்காக TNSCST ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கீடு செய்து நிதி உதவி அளித்தது . கல்லூரி நிர்வாகம் அவர்களின் நிலையான ஆதரவுடன் மற்றும் கல்லூரி முதல்வர் அவர்களின் சிறந்த ஆலோசனையுடன் நடைபெற்றது.

விஞ்ஞானி, முனைவர்.செந்தில்குமார், தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் சென்னை மற்றும் டாக்டர்.பி.என்.ரிச்சர்ட் ஜெகதீசன், டீன் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், தேனி உதவி மற்றும் ஆதரவுக்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

## 9. புதுமைப் பெண் திட்டம்

இந்த கல்வியாண்டில் நமது தமிழக அரசால் அறிமுகப்பபடுத்தப்பட்ட புதுமைப் பெண் திட்டத்தில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று கல்லூரியில் பயிலும் மாணவிகளில் இந்த கல்வியாண்டில் மொத்தம் 52 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000/- பெற்று இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்று வருகின்றனர். இதன் இணைப்பு அதிகாரியாக தமிழ்த்துறைத்தலைவர் லெ.அலமேலு அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## 10. நான் முதல்வன் திட்டம்

தமிழக அரசின் கனவுத்திட்டமான நான் முதல்வன் திட்டம் மதுரை காமராசர்பல்கலைக்கழகத்தின் மூலம் நமது கல்லூரியில் நடைபெறுகிறது. இந்தக் கல்வியாண்டில் 1432 மாணவர்களுக்கு பல்வேறு படிப்புகள் நடைபெற்றது. Microsoft, oracle, Rareminds, Edumet, Wisely wise, TN APEX Logistics, NSE Academy, Cambridge ஆகிய நிறுவனங்கள் மூலம் பருவத்திற்கு 45 மணி நேரம் பயிற்சி

அளிக்கப்பட்டது. தேர்வுகள் மற்றும் Project மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பெண் வழங்கப்பட்டது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற FDP- கருத்தரங்கில் 49 பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இதன் இணைப்பு அதிகாரியாக (SPOC) இயற்பியல்துறைத்தலைவர் முனைவர்.ஜி.ராஜ்மோகன் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## 11. மாபெரும் தமிழ்க் கனவு

போடிநாயக்கனூர் அரசினர் பொறியியல் கல்லூரியில் 01.09.2023 அன்று தமிழக அரசால் நடத்தப்பட்ட "மாபெரும் தமிழ்க்கனவு" நிகழ்ச்சியில் நம் கல்லூரி சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகளுடன் இதன் ஒருங்கிணைப்பாளர் முனைவர்.லெ.அலமேலு மற்றும் பேராசிரியை க.தனலட்சுமி அவர்கள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

## 12. துறை வாரியான செயல்பாடுகள் :

### a. வணிகவியல் துறை (DEPARTMENT OF COMMERCE)

வணிகவியல் துறையின் சார்பாக முதுகலை வணிகவியல் பயிலும் 31 மாணவ, மாணவியர்கள் மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் 75 மாணவ, மாணவியர்களும் spices Board – Boadinayakanur-க்கு Industry visit-க்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

31.08.2023 அன்று வணிகவியல் துறையின் Inagural Function நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக Dr.David Martin, Vice Principal, American College, Madurai அவர்கள் பங்கேற்றார். இந்த விழாவில் துறையின் அனைத்து பேராசிரியர்களும், மாணவ, மாணவியர்களும் பங்கேற்றனர்.

29.09.2023 அன்று Industrial Visit-க்காக மதுரையில் உள்ள ஸ்ரீ விநாயகா கார்மெண்ட்ஸ் தொழிற்சாலைக்கு சென்று அந்த நிறுவனத்துடன் MOU (Memorandum of understanding ) கையெழுத்தாகி உள்ளது.

முனைவர்.எஸ்.பாலமுருகன் அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக இளங்கலை வணிகவியல்துறை பாடதிட்ட வல்லுனர் குழு உறுப்பினராகவும், நாட்டு நலப்பணித்திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

உத்தமபாளையம் HKRH கல்லூரிக்கு B.Com Banking பாடத்திட்டத்திற்கும் மதுரை சுப்புலட்சுமி லட்சுமிபதி அறிவியல் கல்லூரியில் B.Com (Honours) பாடத்திட்டத்திற்கும் பல்கலைக்கழக நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

21.07.2023 அன்று மதுரை S.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் "இன்றைய கால கட்டத்திற்கான தொழில் முனைவோர்க்கான வாய்ப்புகள் என்ற தலைப்பிலும் 07.12.2023 அன்று "பெரியகுளம் திரவியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "ICWA and NET / SET Coaching" என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினார்.

20.07.2023 அன்று HKRH கல்லூரியிலும் 23.02.2024 அன்று கோயம்புத்தூர் ஸ்ரீ இராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் Ph.D viva-voce Examinar ஆக கலந்து கொண்டார்

பெரியகுளம் திரவியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 20.01.2024 நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

முனைவர்.அ.சுஜாதா அவர்கள் 11.09.2023 முதல் 24.09.2023 வரை "Commrce & Financial Management organized by Malaviya Mission Teacher Training Programme UGC – HRDC-ல் நடத்தப்பட்டபுத்தாக்கப்பயிற்சியில் பங்கேற்றுள்ளார்.

04.12.2023 மற்றும் 05.12.2023 அன்று நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கிலும், மார்ச் 8 மற்றும் 9 ஆம் தேதிகளில் பன்னாட்டு கருத்தரங்கிலும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்.

"Best researcher award – 2023" என்ற Award-ஐ Indian Academic Researcher Association, Trichirappali, India வழங்கி உள்ளது.

திரவியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 03.02.2024 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

முனைவர்.டி.இராமலெட்சமி அவர்கள் டெல்லி பல்கலைக்கழகம் 06.09.2023 முதல் 20.09.2023 வரை நடத்திய 14 நாட்கள் புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டுள்ளார்.

21.09.2023 அன்று சௌராஷ்டிர கல்லூரியிலும், ஜீன்- 2023ல் UGC care Approved Group-யிலும் தனது ஆராய்ச்சி கட்டுரையை வெளியிட்டு அதற்கான சான்றிதழையும் பெற்றுள்ளார்.

17.02.2024, 24.02.2024, 02.03.2024 ஆகிய நாட்களில் மதுரை காமராசர்பல்கலைக்கழகத்தால் நடைபெற்ற இணையவழி கருத்தரங்கில் பங்கு பெற்றுள்ளார்.

PSR கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசியில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடத்தும் செய்முறை தேர்வுக்கு வெளி மதிப்பீட்டாளராக நியமிக்கப்பட்டு 26.10.2023 முதல் 28.10.2023 வரை தேர்வு பணியாற்றியுள்ளார்.

முனைவர்.வீ.கிருஷ்ணகுமார் அவர்கள் தமிழக அரசின் உயர்கல்வி மாணவர்களின் தொழில் முனைவு திறனை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட "EDII'S Hackathon innovation Idea" என்ற திட்டத்தின் மதிப்பீட்டாளராக (Jury) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும் இவர் சென்ற கல்வியாண்டு முதல் தமிழக அரசின் பள்ளி கல்வி துறையில் தமிழக அரசின் School Innovation Development Project (SIDP)ல் மதிப்பீட்டாளராகவும் இருந்து வருகிறார்.

"The Block chain Enabled secure Financial Transcations Innovations in Finance என்ற தலைப்பில் காப்புரிமை (Patent) பெறுவதற்கு தனது Proposal-ஐ சமர்ப்பித்துள்ளார்.

இந்த கல்வியாண்டில் சிறந்த ஆராய்ச்சியாளர்க்கான விருதினை International Business and Education Awards, Delhi-யிடமிருந்து பெற்றுள்ளார்.

அரசு மகளிர் கல்லூரி, நிலக்கோட்டையில் நடைபெற்ற கருத்தரங்கில் Resource person ஆக கலந்து கொண்டு "An Entrepreneurial Traits – As Discussion" என்ற தலைப்பில் உரையாற்றி வந்துள்ளார்.

டெல்லி பல்கலைக்கழகம் 06.09.2023 முதல் 20.09.2023 வரை நடைபெற்ற புத்தாக்கப் பயிற்சி முடித்துள்ளார்.

International Journal of Accounting, Auditing & Taxation என்ற பன்னாட்டு ஆராய்ச்சி இதழின் Editor ஆக தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மூலம் M.Com (CA) செய்முறை தேர்விற்கு External Examiner ஆக ராஜபாளையம் ராஜீஸ் கல்லூரி மற்றும் பழனியாண்டவர் கல்லூரிக்கும் சென்று வந்துள்ளார்.

பாரத் நிகர்நிலை பல்கலைக்கழகம், சென்னை நடத்திய ஒரு நாள் தேசிய கருத்தரங்கில் தனது ஆய்வு கட்டுரையை சமர்ப்பித்துள்ளார்.

முனைவர்.ஜி.தங்கதுரை அவர்கள் Dr.G.R.தாமோதரன் கல்லூரி, கோயம்புத்தூர் மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலும் வினாத்தாள் அமைப்பளாராக இருந்துள்ளார்.

08.02.2024 அன்று மதுரா கல்லூரி, மதுரையில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

15.03.2024 அன்று நோபல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விருதுநகரில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் சிறப்புரையாற்றினார்.

முனைவர்.கே.வனித்தீஸ்வரி அவர்கள் 10 நாட்கள் இணையவழியில் நடைபெற்ற தேசிய அளவிலான ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் 07.07.2023 முதல் 13.07.2023 வரை அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் திறன் மேமப்பாட்டு பயிற்சியிலும் பங்கேற்று உள்ளார்.

05.07.2023 முதல் 06.07.2023 வரை காவேரி மகளிர் கல்லூரியில் இணையவழியில் நடைபெற்ற state level seminar-யில் பங்கேற்றார்.

முனைவர்.எஸ்.விஜயலெட்சுமி அவர்கள் 13.02.2024 அன்று ஹாஜி கருத்த ராவுத்தர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு நாள் தேசிய கருத்தரங்கில் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டு "Recent Trends in Banking sector" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றியுள்ளார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 17.01.2024 முதல் 21.01.2024 வரை நான் முதல்வன் சார்பில் 5 நாட்கள் நடைபெற்ற FDP –ல் கலந்து கொண்டார்.

லதா மாதவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடத்திய செய்முறை தேர்வில் External Examinar-ஆக 16.11.2023 முதல் 18.11.2023 வரை கலந்து கொண்டு பணியாற்றியுள்ளார்.

முனைவர்.எஸ்.யோகபிரியதர்ஷினி அவர்கள் 07.11.2023 மற்றும் 08.11.2023 ஆகிய தேதிகளில் மதர் தெரசா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வெளிமதிப்பீட்டாளராக செயல்பட்டார்.

இ.பாப்புலெட்சுமி அவர்கள் 21.12.2023 முதல் 23.12.2023 வரை நடத்திய இணையவழி பன்னாட்டு பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டுள்ளார்.

15.12.2023 அன்று கோயம்புத்தூர் பிசப் கல்லூரியில் நடைபெற்ற "பன்னாட்டு கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளார்.

முனைவர்.எஸ்.நாகலிங்கம் அவர்கள் South India Journal of Social Science-யில் "Impact of intra Organizational Relationship on film's effectivess" என்ற தலைப்பில் paper publish செய்துள்ளார்.

05.07.2023, 06.07.2023 இரண்டு நாட்கள் காவேரி மகளிர் கல்லூரி, திருச்சியில் நடைபெற்ற National virtual seminar-ல் கலந்து கொண்டு உள்ளார்.

அய்ய நாடார் ஜானகியம்மாள் கல்லூரி, சிவகாசியில் நடைபெற்ற 'upskill your Resoursces" என்ற தலைப்பில் Oneweek Faculty Development programme-ல் கலந்து கொண்டு உள்ளார்.

மேரி மாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரியகுளத்தில் 03.11.2023 செய்முறை தேர்வுக்கு வெளி மதிப்பீட்டாளராக செயல்பட்டுள்ளார்.

07.02.2023 முதல் நமது கல்லூரியின் NCC-யில் "Care taker" ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 5 நாள் Faculty Development Programme –ல் கலந்து கொண்டு உள்ளார்.

02.03.2024 அன்று Golaghat Pusbanchark college, Assam நடத்திய One day UGC- sponsored webinar-ல் கலந்து கொண்டு உள்ளார்.

28.02.2024 அன்று Malaviya Mission Teacher Trainning Centre, MKU-ல் நடத்திய "Research and Development" என்ற தலைப்பில் One day UGC- sponsored -ல் கலந்து கொண்டு உள்ளார்.

DIGI Skills center, ACT Academy, Kerala-ல் மூன்று நாட்கள் தேசிய கருத்தரங்கில் கலந்து கொண்டு உள்ளார். 20.03.2024 அன்று Head Quarters NCC Directorate (TN, P & AN) Chennai நடைபெற்ற "selection as Associate NCC officer" நேர்காணலில் கலந்து கொண்டு உள்ளார்.

திரு.கே.மதன்குமார் அவர்கள் Special minds நடத்திய International online workshop-ல் Program on AMOS : SEM and CFA" என்ற தலைப்பில் 20.10.2023 முதல் 22.10.2023 வரை மூன்று நாட்கள் கலந்து கொண்டார்.

Global Institute of Statistical solutions (GISS) 02.03.2024 முதல் 04.03.2023 வரை நடத்திய International online workshop-யில் கலந்து கொண்டார்.

### b. வேதியியல் துறை : (DEPARTMENT OF CHEMISTRY)

பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் அறிவை வளர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் உதவியுடன் முனைவர்.இந்திராமகாலெட்சுமி அவர்கள் தலைமையில் அறிவியல் புதிய கண்டுபிடிப்பு நிகழ்ச்சி நம் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

முனைவர்.ஆர்.கார்த்திகா அவர்கள் கொல்கத்தா, மேற்குவங்காளம் மாநிலத்தில் உள்ள ஹெரிடேஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலாஜி கல்லூரியில் 27.12.2023 முதல் 30.12.2023 வரை நடைபெற்ற கருத்தரங்கில் ஆய்வு கட்டுரையை சமர்பித்துள்ளார். மேலும் கருத்தரங்கில் ஒரு அவையின் பிரிவை தலைமை தாங்கி நடத்தியுள்ளார். தன் ஆய்வுக்கட்டுரையை Journal of water and environmental Nanotechnolgy என்ற ஆய்வுதளத்தில் வெளிட்டுள்ளார்.

முனைவர்.ஆர்.கார்த்திகா இயற்கை முறையில் நானோ பொருள்கள் என்ற தலைப்பில் புத்தக பிரிவு வெளியிட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

CSIR-CECRI, Karaikudi-யில் 19.02.2024 முதல் 23.02.2024 வரை நடைபெற்ற sensor சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி சம்பந்தமான கருத்தரங்கில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் தினேஷ், ரோகித், யோகதர்ஷினி, நிகிதாகிரி, கோகிலாவர்ஷினி, சிவப்பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேதியியல்துறை ஆய்வு மாணவி T.சூர்யகலா அவர்கள் தனது ஆய்வு அறிக்கையை மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் சமர்பித்துள்ளார்.

## c. கணிதத்துறை (DEPARTMENT OF MATHEMATICS)

14.08.2023 மற்றும் 18.08.2023 ஆகிய இரண்டு நாட்கள் கணிதத்துறை சார்பாக கருத்தரங்கு நடைபெற்றது.

28.03.2024 அன்று கணிதத்துறையிலிருந்து Industrial Visit-க்காக 58 மாணவர்கள் மற்றும் 3 ஆசிரியர்கள் கொடைக்கானலுக்கு சென்று வந்தனர்.

முனைவர்.அ.மகேஸ்வரன், கணிதத்துறை தலைவர் B.Sc Maths –க்கு Board of Studies மதுரை காமராசர்பல்கலைக்கழகத்தால் Chaiman மற்றும் TANSCHE பாடத்திட்டத்தின் வல்லுநராக உள்ளார்.

முனைவர்.கே.கிருஷ்ணன் 01.03.2024 அன்று ஆண்டிபட்டி அரசுகலைக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் Dominated Fuzzy Graph என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

உத்தமபாளையம் HKRH கல்லூரியின் கணிதத்துறையில் M.Sc Project Viva-voce-க்கு வெளி தேர்வாளராகவும் செயல்பட்டார்.

முனைவர்.வி.ஹேமலதா அவர்கள் Scopus inxed Jouunal-ல் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளார். இரண்டு தேசிய அளவிலான கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார் மேலும் 1 புத்தாக்கப் படிப்பை முடித்துள்ளார்.

முனைவர்.ஆர்.ரோகிணி அவர்கள் திருத்தப்பட்ட புத்தகத்தில் One Book Chapter வெளியிட்டுள்ளார். மேலும் 5 நாட்கள் FDP-யில் இரண்டு முறை பங்கேற்றுள்ளார்.

திருமதி.சுகுணா செல்வராணி அவர்கள் காப்புரிமை இதழில் ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டார். மேலும் 4 தேசிய அளவிலான கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். 5 நாட்கள் FDP-யில் இரண்டு முறை பங்கேற்றுள்ளார். NPTEI படிப்பை முடித்துள்ளார். மேலும் ஒரு புத்தாக்கப் பயிற்சியை முடித்துள்ளார்.

முனைவர்.ஏ.ஆர்.மணிகண்டன் அவர்கள் Scopus inxed Journal-ல் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளார். மூன்று தேசிய அளவிலான கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார். ஒரு கட்டுரையை சமர்ப்பித்துள்ளார். 5 நாட்கள் FDP-யில் நான்கு முறை பங்கேற்றுள்ளார். ஒரு புத்தாக்கப் பயிற்சியை முடித்துள்ளார்.

முனைவர்.சி.வசந்தி அவர்கள் ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டுள்ளார். மேலும் ஒரு தேசிய அளவிலான கருத்தரங்கிலும் பங்கேற்றுள்ளார். FDP-யில் ஒரு முறை பங்கேற்றுள்ளார். SWAYAM படிப்பை முடித்துள்ளார்.

முனைவர்.வி.செந்தில்குமார் தனது ஆய்வுக் கட்டுரை ஒன்றை Journal-ல் வெளியிட்டுள்ளார். 3 தேசிய அளவிலான கருத்தரங்குகளில் பங்கேற்று ஒரு SWAYAM பாடத்தை முடித்துள்ளார். மேலும் 12.09.2023 அன்று Graph Theory and Applications என்ற தலைப்பில் NPR- கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திண்டுக்கல் Guest Lecture - ஆக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

முனைவர்.அமலப்பிரியா அவர்கள் 5 தேசிய அளவிலான கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். மேலும் FDP-யில் ஒரு முறை பங்கேற்றுள்ளார். SWAYAM படிப்பை முடித்துள்ளார்.

திரு.டேனியல் அவர்கள் 5 தேசிய அளவிலான கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். மேலும் FDP-யில் ஒரு முறை பங்கேற்றுள்ளார். SWAYAM படிப்பை முடித்துள்ளார்.

**d. பொருளியல் துறை (DEPARTMENT OF ECONOMICS)**

பொருளியில்துறை சார்பாக மாணவர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு 22.09.2023 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் மேலூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பொருளியல்துறை இணைப்பேராசிரியர் முனைவர்.A.மாரிமுத்து அவர்கள் "பொருளாதார மாசுபாடு மற்றும் அதன் தாக்கம்" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார்.

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர்.எஸ்.செந்தில்குமார் அவர்கள் பன்னாட்டு ஆய்வுக்கட்டுரை ஒன்றினை வெளியிட்டார். மேலும் தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு அதற்கான சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

பேராசிரியை முனைவர்.ஹேமா அவர்கள் இணைய வழியில் புத்தாக்க பயிற்சியில் கலந்து கொண்டு அதற்கான சான்றிதழைப் பெற்றார்.

பேராசிரியயை ஹேமலதா அவர்கள் இணையவழியில் புத்தாக்க பயிற்சியில் கலந்து கொண்டுஅதற்கான சான்றிதழைப் பெற்றார். மேலும் பன்னாட்டு ஆய்வுக்கட்டுரை

ஒன்றினை வெளியிட்டார் மற்றும் பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு அதற்கான சான்றிதழைப் பெற்றார்.

பேராசிரியர் முனைவர்.ராகுல்காந்தி அவர்கள் பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு அதற்கான சான்றிதழைப் பெற்றார்.

பேராசிரியை செல்வி அவர்கள் பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு அதற்கான சான்றிதழைப் பெற்றார்.

ஏப்ரல் 2022-ல் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக தேர்வில் தரவரிசைப் பட்டியலில் பொருளாதார துறையைச் சார்ந்த மாணவிகள் S.ஹேமா முதல் இடத்தையும், M.தாமரைச்செல்வி 7ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

09.02.2024 அன்று மதுரை கல்லூரியில் பொருளியல் துறை சார்பாக ஒரு நாள் மாநில அளவில் கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் நமது கல்லூரி பொருளியல் துறையைச் சார்ந்த 5 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு சான்றிதழைப் பெற்றனர்.

10.02.2024 அன்று மதுரை கல்லூரியில் பொருளியல் துறை சார்பாக பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பொருளியல் துறை மாணவர்கள் மௌனமொழி நாடகம் மற்றும் சிறப்பு நடைபோட்டியிலும் 2ஆம் பரிசினைப் பெற்றனர்.

12.02.2024 அன்று நமது கல்லூரியில் நுகர்வோர் மன்றம் சார்பாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு பொருளியல்துறை மாணவிகள் பேச்சுப்போட்டியில் முதல் இடத்தையும், மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

### e. வரலாற்றுத் துறை (DEPARTMENT OF HISTORY)

07.08.2023 அன்று வரலாற்றுத்துறை சார்பாக தொல்லியல் வரலாறும் இலக்கியமும் என்னும் தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. 06.10.2023-ல் கீழடி, ஆண்டிபட்டி போன்ற தொல்லியல் சார்ந்த இடங்களுக்கு கல்வி பயணம் மேற்க்கொள்ளப்பட்டது. 23.01.2024-ல் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 127-வது பிறந்த தின விழா போட்டிகள் நடைபெற்றது. 24.01.2024-ல் நேதாஜியும் ஐ.என்ஏவும் என்னும் தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. 12.02.2024 அன்று மூன்றாமாண்டு மாணவ, மாணவியர்களுக்கு HKRH, உத்தமபாளையம் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

முனைவர்.சி.மாணிக்கராஜ் அவர்கள் 31.10.2023ல் வருசநாடு, தங்கம்மாள்புரத்தில் 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டிய நாட்டு கல்வெட்டுகளைக் கண்டுப்பிடித்தார்.

26.12.2023 "டொம்புச்சேரி தொல்லியல் தடயங்கள்" குறித்து புதிய தலைமுறை தொலைகாட்சி நேர்காணலில் பங்கேற்றுள்ளார்.

31.10.2023 மற்றும் 01.11.2023 -ல் இராஜபாளையம் இராஜீக்கள் கல்லூரி, நடத்திய ஒரு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை சமர்ப்பித்துள்ளார். நிலம் மின்னிதழில் கட்டுரை ஒன்று வெளியிட்டுள்ளார்.

முனைவர்.ஆர்.கபேஷ் அவர்கள் 08.08.2023 அன்று நமது கல்லூரியின் வரலாற்று துறையும், தமிழ் துறை சுயநிதி பிரிவும், அரசு அருங்காட்சியகம், ஆண்டிபட்டி ஆகியவை இணைந்து ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. முனைவர்.மருது பாண்டியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இக்கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக உதவிப்பேராசிரியர் முனைவர்.ஆர்.கபேஷ் அவர்கள் செயல்பட்டார்.

13.09.2023 முதல் 26.09.2023 வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் புத்தாக்க பயிற்சியை நிறைவு செய்துள்ளார்.

27.09.2023 ஆம் தேதி வரலாற்று துறை மாணவர்கள் மற்றும் உலக சுற்றுலா தின போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மொத்தம் 33 மாணவர்கள் சுருளி சாரல் விழாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சுருளி சாரல் விழாவில் நமது கல்லூரியின் சார்பாக தூய்மை பணிகளும் விழிப்புணர்வு பேரணி மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. மாணவர்களுடன் வரலாற்றுதுறை தலைவர் முனைவர். ஞானசேகரன் அவர்கள் முதுகலை வரலாற்றுதுறை பேராசிரியை திருமதி.ஜின்ஸி மற்றும் உதவிபேராசிரியர் தியாகராஜன் அவர்கள் சென்றனர். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சார்பாக பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

முனைவர்.ஜி.கருப்புசாமி அவர்கள் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ளார்.

### f. இளங்கலை கணினி அறிவியல் (Computer Science Department)

கணினி அறிவியல் துறையின் சார்பாக 2023-2024-ம் ஆண்டில் சுமார் 11 நிகழ்வுகள் நடத்தப்படடன. இந்த ஆண்டின் முதல் நிகழ்வாக துறையின் இறுதியாண்டு மாணவர்களுக்கு "LinkedIn Kick-Starters' Employment Programme" கல்லூரியின் Careeer Guidance cell-னால் 04.07.2023 அன்று நடைபெற்றது.

02.08.2023 அன்று துறையின் "Computer Club" துவக்க விழா மற்றும் முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் "Freshers Day" விழாவும் நடைபெற்றது. விழாவின் சிறப்பு விருந்தினராக திரு.I.ஜெகன்குமார், Director, Big bull Empire Block Chain Acadmey, Chinnamanur and Chennai அவர்கள் கலந்து கொண்டு "Block Chain and decentralization : Advantages. Disadvanctages and Implementation" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

G-Tec Computer Education, Theni-யால் 02.09.2023 அன்று நடத்தப்பட்ட நிரலாக்கல் போட்டியில் மூன்றாம் ஆண்டு கணினி அறிவியல் மாணவன் N.சக்திஹரிஹரன் முதலிடத்தை பெற்றார்.

உலகதிட்டமிடுபவர் (Programmer) தினம் 13.09.2023 அன்று கொண்டாடப்பட்டது. விழாவினை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் மாணவர்களுக்காக நடத்தப்பட்டு, நிறைவு விழாவின் போது போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

கணினி அறிவியல் துறையின் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கான கல்விசுற்றுலா 29.09.2023 முதல் இரண்டு நாட்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. இருபது மாணவர்களுகடன் பேராசிரியர்கள் திருமதி.எஸ்.மதுமலர் மற்றும் திரு.எம்.முரளிராஜ் அவர்களும் கொச்சின் சென்று வந்தனர்.

"Future Trends in IOT: what to expect in the nextdecade" என்ற தலைப்பில் 19.01.2024 அன்று ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. Dr.P.Yogesh, Professor, Department of Information science and Technology, Anna University, Chennai அவர்கள் சிறப்புரையாற்றினார்.

கல்லூரி Career Guidance Cell-னால் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு வழிகாட்டல் திட்டம் மூன்று பகுதிகளாக "Kurinij Technolgy solution Pvt Ltd". போடிநாயக்கனூர் அவர்கள் Phase I - 19.01.2024, 22.01.2024, 23.01.2024 Phase II - 19.02.2024 முதல் 22.02.2024 வரை மற்றும் Phase III - 04.03.2024 முதல் 07.03.2027 வரை நடத்தப்பட்டது.

2022-2023-ல் பயின்ற இறுதியாண்டு மாணவிகள் ராகவர்ஷினி, சோபியா & சுமித்ராதேவி ஆகிய மூவரும் கல்லூரியில் நடத்தப்பட்ட "Kurinij Technolgy solution Pvt Ltd". வேலைவாய்ப்பு வழிகாட்டல் முகாமில் தேர்வு பெற்று அந்த நிறுவனத்தில் தற்போது பணியாற்றி வருகின்றனர். மேலும் ராம்ஹரினி என்று மாணவி Tata consultancy service (TCS)-ல் தற்போது பணிபுரிந்து வருகிறார்.

14.02.2024 அன்று தேனி, திரவியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகளில் கணினி அறிவியல் துறை மாணவர்கள் கலந்து கொண்டு "Over all championship" பட்டத்தை வென்றனர்.

13.03.2024 அன்று கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் கணினி அறிவியல்துறையின் முதலாமாண்டு மாணவன் கே.ஹரிபாலாஜி ஆண்களுக்கான Championship பட்டத்தை வென்றார்.

19.03.2024 முதல் 21.03.2024 வரை துறையின் இறுதியாண்டு மாணவர்களுக்கு "Life skills Programme" Rubicon backeley நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

## g. தமிழ்த்துறை

தமிழ்த்துறையின் உதவிப்பேராசிரியை முனைவர்.லெ.அலமேலு அவர்கள் 21.06.2023 முதல் தமிழ்த்துறைத்தலைவர் பொறுப்பிலிருந்து தமிழ்த்துறைத்தலைவராக நியமிக்கப்பட்டார். திருநெல்வேலி ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியில் இக்கல்வியாண்டின் பாடத்திட்டக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். உத்தமபாளையம், ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரியின் வினாத்தாள் அமைப்பதில் உறுப்பினராக இருக்கிறார். தேனி மாவட்ட மைய நூலகத்தில் 56-ஆவது தேசிய நூலக வார விழாவிலும், கம்பம் ஸ்ரீ ஆதி சுஞ்சனகிரி மகளிர் கல்லூரியில் தமிழ்துறை நடத்திய ஒரு நாள் கருத்தரங்கிலும் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகம் சார்பாக நடத்தப்பட்ட புத்தாக்கப் பயிற்சியில் 21.07.2023 முதல் 03.08.2023 வரை பங்கேற்று நிறைவு செய்தார்.

சென்னைப்பல்கலைக்கழகத்தில் 04.10.2023 முதல் 17.10.2023 வரை நடைபெற்ற தமிழ்ப்பாடம் சார்ந்த புத்தொளிப்பயிற்சியை உதவிப்பேராசிரியை வே.மீனா அவர்கள் நிறைவு செய்தார்.

தேனி கோட்டூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 21.03.2024 அன்று உதவிப்பேராசிரியை M.S.இராதா அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

தமிழ்த்துறையும் வரலாற்றுத்துறையும் இணைந்து நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 23.01.2024 அன்று மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தியது அதில் வெற்றி பெற்றவர்களுக்குக் கருத்தரங்க நாளில் சிறப்பு விருந்தினர் கவிஞர்.கோ.பரதன் அவர்கள் தலைமையில் பரிசுகள் வழங்கப்பட்டது.

01.03.2024 அன்று தமிழ்மன்றம் மற்றும் வாசகர் வட்டம் சார்பாக நடைபெற்ற கருத்தரங்கில் திரு.சொக்கலிங்கம் பிரகாஷம் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உடற்கூறியல் (தொன்மை முதல் இன்று வரை) என்ற தலைப்பில் தமிழரின் பெருமையைப் பறைச்சாற்றினார்.

2023-2024-ஆம் கல்வியாண்டில் பகுதி – I பொதுத்தமிழில் மதுரை காமராசர் பல்கலைக்கழக அளவில் வேதியியல் துறை மாணவி K.லோகநாயகி என்ற மாணவி 7 ஆம் தரம் பெற்று தமிழ்த்துறைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

18.12.2023 முதல் 24.12.2023 வரை மதுரை உலகத்தமிழ் சங்கம் சார்பாக நடைபெற்ற ஒரு வார இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் இளங்கலை இராண்டாமாண்டு வணிகவியல்துறை மாணவி A.பவித்ரா அவர்கள் கலந்து கொண்டார்.

தேனி தமிழ்வளர்ச்சித்துறை சார்பாக அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு 01.08.2023 அன்று நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியிலும் 02.08.2023 அன்று கலைஞர் கருணாநிதி பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப்போட்டியிலும் A.பவித்ரா என்ற மாணவி இரண்டாம் இடம் பெற்று பரிசுத்தொகையாக ரூ.3000/- பெற்றார்

09.09.2023 அன்று உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் வணிகவியல் துறை மாணவி.ஆ.பவித்ரா மூன்றாம் பரிசினைப் பெற்றுள்ளார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 21.10.2023 அன்று தேனியில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் மாணவி ஆ.பவித்ரா முதலிடத்தையும் ரூ.10,000/- பரிசுத்தொகையும் பெற்றார். மேலும் இரண்டாமாண்டு வேதியியல்துறை மாணவன் முகமது உமர் கட்டுரைப் போட்டியில் ரூ.7000/- பரிசுத்தொகையும் பெற்று தமிழ்மன்றத்திற்கு பெருமைச் சேர்த்தனர்.

04.02.2024 அன்று திருநெல்வேலி தீந்தமிழ் கலை இலக்கிய அறக்கட்டளை மற்றும் வீரபாண்டி தேனி கலை & அறிவியல் கல்லூரி இணைந்து நடத்திய மாணவர்களின் திறன் வளர்ச்சி விழாவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்றனர் நம் தமிழ்மன்ற மாணவர்கள் கவிதைப்போட்டியில் S.ஸ்ரீதரன் இரண்டாம் பரிசினையும், Pசூர்யபிரகாஷ் மூன்றாம் பரிசினையும் மற்றும் பேச்சுப்போட்டியில் A.பவித்ரா மூன்றாம் பரிசினையும் பெற்றனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நம் கல்லூரி மாணவ, மாணவியர்களின் திறன்களை அறியும் வகையில் 27.12.2023 அன்று தமிழ்மன்றம் சார்பாக கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

## h. ஆங்கில துறை: (Department of English)

நமது கல்லூரி ஆங்கிலத்துறையில் "English Literary Association" பொன்விழா ஆண்டு தொடக்க விழா 14.08.2023 அன்று நடைபெற்றது. Dr.R.ராஜேஷ், Head, Department of English Language studies, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

முனைவர்.B.ஆனந்தபிரசாத் அவர்கள் 22.09.2023 முதல் 06.10.2023 முடிய டெல்லி இராமனுஜர் கல்லூரி நடத்திய 14 நாட்கள் புத்தாக்கப்பயிற்சியில் கலந்து கொண்டு நிறைவு செய்துள்ளார். மேலும் இவர் Cultural Expressions in Women's

journey to leadership” என்ற தலைப்பில் “Humanities and social science” என்கிற இதழில் தம் கட்டுரை ஒன்றுக்கு பிரசுரம் பெற்றுள்ளார். மேலும் கேரளா மாநிலம் JPM Arts and Science கல்லூரி 27.01.2024 மற்றும் 28.01.2024 ஆகிய 2 நாட்கள் நடத்திய International conference-ல் பங்கெடுத்து ஆராய்ச்சி கட்டுரை ஒன்று வாசித்தார். இவருடைய மேற்பார்வையில் திரு.R.அபிஷேக் எனும் ஆராய்ச்சி மாணவர் Ph.D ஆய்விற்க்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்துள்ளார்.

முனைவர்.C.பழனிவேல்ராஜன் அவர்கள் 21.07.2023 முதல் 03.08.2023 முடிய டெல்லியில் 14 நாட்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடத்திய புத்தாக்கப்பயிற்சியில் கலந்து கொண்டு நிறைவு செய்துள்ளார். மேலும் இவர் 17.10.2023 முதல் 19.10.2023 முடிய கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம் “Documentation of Socio-Cultural and Linguistic Traits of Tribes – issues and challenges” என்கிற தலைப்பில் நடத்திய பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டுள்ளார்.

முனைவர்.V.விமலா அவர்கள் கோவை PPG கல்லூரியில் 7 நாட்கள் FDP பயிற்சி பெற்றள்ளார். டெல்லி இராமானுஜம் கல்லூரியில் 14 நாட்கள் நடத்திய புத்தாக்ப்பயிற்சியில் பங்கு பெற்றார். பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் Board of studies student Representative ஆக இருக்கிறார். இவரது மேற்பார்வையில், ஒரு மாணவர் Ph.D பட்டம் பெற்றுள்ளார். இரண்டு மாணவர்கள் Ph.D பட்டத்திற்க்காக பதிவு செய்துள்ளனர்.

முனைவர்.எம்.சுமையாபானு அவர்கள் கடந்த 17.08.2023 முதல் 30.08.2023 முடிய பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் நடத்திய 14 நாட்கள் புத்தாக்க பயிற்சியில் பங்கு பெற்று வந்துள்ளார்.

முனைவர்.எம்.கிஷோர்குமார் அவர்கள் டெல்லி இராமானுஜம் கல்லூரியில் 22.05.2023 முதல் 05.06.2023 முடிய 14 நாட்கள் நடத்திய புத்தாக்கப் பயிற்சியியல் பங்கு பெற்றுள்ளார்.

திரு.P.இளவரசன் அவர்கள் 22.05.2023 முதல் 05.06.2023 முடிய 14 நாட்கள் டெல்லி இராமானுஜம் கல்லூரி நடத்திய புத்தாக்கப்பயிற்சியை இணையவழியில் பங்கெடுத்து நிறைவு செய்துள்ளார்.

உதவிப்பேராசிரியை P.பிரியங்கா அவர்கள் 21.11.2023 முதல் 04.12.2023 முடிய 14 நாட்கள் சென்னை பல்கலைக்கழகம் நடத்திய புத்தாக்கப் பயிற்சியில் பங்கு பெற்று பயிற்சி எடுத்து வந்துள்ளார்.

i. **தாவரவியல் துறை: (Department of Botany)**

Dr.C.கோபி அவர்கள் புதிய ஊதியக்குழு கல்வி நிலை 13 A இல் 13.06.2023 முதல் இணைப்பேராசிரியராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

Dr.C.கோபி அவர்கள் ஒரு மாணவருக்கு பி.எச்.டி ஆராய்ச்சிக்கு இணை வழிகாட்டியாக செயல்பட்டார்.

"Evaluation and chemical characterization of bioactive secondary metabolites from endophytic fungi associated with the ethnomedicinal plant, bergenia cilitata" என்ற தலைப்பில் ஆராய்ச்சி கட்டுரை ஒன்று வெளியிட்டுள்ளார்.

08.02.2024 அன்று காமாட்சிபுரத்தில் உள்ள CENDECT, ICAR-KVK-யில் தேனி மாவட்ட அளவில் நடைபெற்ற மாநாடு மற்றும் வேளாண் விலை பொருள் மற்றும் தொழில் முனைவோர் கண்காட்சிக்கு தாவரவியல் துறையின் 50 மாணவர்களுடன் கல்லூரி செயலாளர் திரு.ஆர்.புருஷோத்தமன், முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார், தாவரவியல்துறைத்தலைவர் முனைவர்.சி.கோபி, சுயநிதிப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் உதவிப்பேராசிரியர் முனைவர். ஜெ.அருள்ராஜ், ஆய்வக உதவியாளர் திரு.எஸ்.ராஜரத்தினம் ஆகியோர் பங்கேற்றனர்.

15.11.2023 மற்றும் 13.03.2024 ஆகிய தேதிகளில் மதுரை காமராசர் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர்.ஜே.குமார் அவர்கள் தலைமையேற்று நடத்திய கல்வி பேரவை உறுப்பினர் கூட்டத்திலும் 21.11.2023 மற்றும் 28.03.2024 ஆகிய தேதிகளில் ஆட்சி பேரவைக்குழு கூட்டத்திலும் (Senate Meeting) 04.04.2024 மற்றும் 13.10.2023 ஆகிய தேதிகளில் பல்கலைக்கழகத் தேர்வு குழு கூட்டத்திலும் தாவரவியல்துறைத்தலைவர் முனைவர்.சி.கோபி அவர்கள் கலந்து கொண்டார்.

19.09.2023 முதல் 22.09.2023 வரை டி.என்.பி.எஸ்.சி, சென்னை அலுவலகத்தில் ரகசியப் பணிக்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் முனைவர்.சி.கோபி அவர்கள் தேர்வாளராக செயல்பட்டார்.

19.09.2023 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர்.ஜே.குமார் அவர்கள் தலைமையேற்று நடத்திய 2023-2024 ஆம் கல்வியாண்டுக்கான (நான் முதல்வன் பாடத்திட்டத்தில் இணைப்பு பற்றியும்) பாடத்திட்டத்தை வகுப்பதற்காக போர்டு ஆப் ஸ்டடிஸ் கூட்டத்தில் தாவரவியல்துறைத்தலைவர் முனைவர்.சி.கோபி அவர்கள் கலந்து கொண்டார்.

**j. இயற்பியல் துறை: (Department of Physics)**

இயற்பியல் துறையில் பணியாற்றும் துறைத்தலைவர் ஜி.ராஜ்மோகன் மற்றும் உதவிப்பேராசிரியயை திருமதி.அ.சுபலெட்சுமி அவர்கள் மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் நடைபெற்ற International conference-ல் கலந்து கொண்டு, தனது ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்துள்ளார்கள்.முனைவர்.அ.சுபலெட்சுமி அவர்கள் தனது ஆய்வு கட்டுரையை Elsevier- journal -ல் கட்டுரை வெளியிட்டுள்ளார்.

12-ஆம் வகுப்பு படிக்கும் அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இயற்பியல் பாடத்தின முக்கியதுவத்தையும், அத்துறை சார்ந்த வேலை வாய்ப்புகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. மாணவ, மாணவியர்களுக்கு இயற்பியல் பாடத்தை படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தினார்கள். நம் கல்லூரி இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவ, மாணவியர்கள் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு, அறிவியல் பாடத்தினை செயல்முறை விளக்கம் மூலம் விளக்கம் அளிக்கப்பட்டு அறிவியல் பாடத்தின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்தினார்கள்.

**k. இளங்கலை வணிக நிர்வாகவியல் துறை (சுயநிதிப்பிரிவு) (BBA Department)**

05.07.2023 அன்று வணிக நிர்வாகவியல் துறை சார்பாக ஒரு நாள் கருத்தரங்கு "Overview of Block chain Technology" என்ற தலைப்பில் நடைபெற்றது. அதில் Big Bull Empire Dubai, Executive chairman Mr.Vinoth perumal samy அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

15.09.2023 அன்று வணிக நிர்வாகவியல் துறை சார்பாக ஒரு நாள் கருத்தரங்கு "Business unicorns" என்ற தலைப்பில் நடைபெற்றது. அதில் Sri Gowmariyamman Food Pvt Ltd, Theni, Director, Mr.L.Sudhakar, B.Com., B.L. MSW. அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு தொழில்வியூகம் பற்றி எடுத்துரைத்தார்.

26.10.2023 மற்றும் 27.10.2023 ஆகிய இரண்டு நாட்கள் அன்று வணிக நிர்வாகவியல் துறை பேராசிரியர் திரு.எஸ்.சுரேஸ்குமார் அவர்கள் தேனி நாடார் சரஸ்வதி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் Stock Market – A Practical Learning என்ற தலைப்பில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவிகளுக்கு சிறப்புரையாற்றினார்.

01.02.2024 அன்று வணிக நிர்வாகவியல் துறை மாணவர்களுக்கு "Union Budget" Live Programme ஏற்பாடு செய்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

07.03.2024 அன்று துறை சார்பாக ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி Savings & Investment என்ற தலைப்பில் Mr.R.Rajesh banu, MFC, MBA, Skill Trainer, Bodri Centre for Training & Development, Madurai அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுடன் உரையாற்றினார்.

**l. முதுநிலை வணிகவியல் துறை (சுயநிதிப்பிரிவு) (Department of Commerce – SF)**

17.08.2023 அன்று "Accounting as a Profession" என்ற தலைப்பில் தேனி நாடார் சரசுவதி பெண்கள் கல்லூரி பேராசிரியை திருமதி.சுசிலா சங்கர் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு ICWA, CA படிப்புகளுக்கான வழிகாட்டுதல் உரை நிகழ்த்தினார். 06.10.2023 அன்று "Role of SEBI Investers Protection and Market stability" என்ற தலைப்பில் SEBI-யின் AGM Mr.E.Elangovan, Mr.R.Bathri Narayanan, Mr.B.Karthick ஆகியோர் பேருரை நிகழ்த்தினர்.

21.09.2023 மற்றும் 22.09.2023 அன்று மதுரை சௌராஷ்டிரா கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் பேராசிரியை திருமதி.நளினி தனது ஆய்வு கட்டுரையை சமர்பித்துள்ளார். மேலும் இணையவழி கருத்தரங்கிலும் பங்கு பெற்றுள்ளார்.

வணிகவியல்துறை மாணவர் கே.மணிமாறன் Nobel உலக சாதனையில் 11.02.2023 அன்று நடைபெற்ற சிலம்பாட்ட போட்டியில் கலந்து கொண்டார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் 10.06.2023 முதல் 12.06.2023 வரை நடைபெற்ற "Youth Games Development Federation" சார்பாக நடைபெற்ற சிலம்பாட்ட போட்டியிலும் கலந்து கொண்டார்.

தேசிய அளவிலும், மாநில அளவிலும் சிலம்பாட்ட போட்டியில் பங்கு பெற்று பரிசுகளையும் பதக்கங்களையும் வென்றுள்ளார்.

**m. கணினிப்பயன்பாட்டு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை :**

**(BCA & B.Sc (IT) Department)**

02.09.2023 அன்று துறையின் சார்பாக "BLOCKCHAIN DATA STRUCTURES : BLOCKS TRANSACTIONS, MERKLETREES" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் மற்றும் ஒரு நாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது. இந்நிகழ்வில் திரு.I.ஜெகன்குமார், Director, Block chain Academy, Chennai அவர்கள் சிறப்புரையாற்றினார்.

18.09.2023 ஆம் தேதி "FREE SOFTWARE'S (OPEN SOURCE) : PROMOTING A BETTER FUTURE" என்றதலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கில்

கணினிஅறிவியல் துறைத்தலைவர் முனைவர்.ஆர்முருகேசன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

13.09.2023 ஆம் தேதி "CODE CARNIVAL" என்ற தலைப்பில் International Programmers Day" சிறப்பாக கொண்டாடப்பட்டது.

எமது துறையைச் சேர்ந்த உதவிப் பேராசிரியை திருமதி.C.பாண்டிச்செல்வி அவர்கள் தனது முனைவர் பட்டப் படிப்பை முடித்துள்ளார்.

**n. ஆங்கிலத் துறை (சுயநிதிப்பிரிவு) (Department of English – SF)**

மாணவ, மாணவியர்களுக்கு பாடத்திட்டம் (Syllabus) சார்ந்த drama, fiction, Poem ஆகியவை வீடியோ மூலமும் கற்பிக்கப்படுகிறது.

26.09.2023 அன்று "One day colloquim importance of English in India" எனும் தலைப்பில் ஜான்சேகர் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

திரு.அபிஷேக் அவர்கள் இணையவழியில் நடைபெற்ற இரண்டு "Swayam course" முடித்துள்ளார்.

திருமதி.உமாமகேஸ்வரி அவர்கள் பன்னாட்டு கருத்தரங்கில் கட்டுரை சமர்ப்பித்துள்ளார் மேலும் இணையவழி கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார்.

**o. இயற்பியல் துறை (SF)**

இயற்பியல் துறை பேராசிரியர் முனைவர்.ச.கார்த்திகாராணி பன்னாட்டு இதழில் ஆய்வு கட்டுரைகள் வெளியிட்டு உள்ளார்.

பேராசிரியை திருமதி.தி.பாண்டிமீனா அவர்களும் பன்னாட்டு இதழில் ஆய்வு கட்டுரை வெளியிட்டு உள்ளார்.

**p. வேதியியல் துறை (SF)**

04.08.2023-ல் பன்னாட்டு கருத்தரங்கம் முதுகலை வேதியியல்துறை சார்பாக நடத்தப்பட்டது. அதில் முனைவர்.K.ஈஸ்வரன்,International Research Professor, School of Chemical Engineering, Yeungnam University, south korea அவர்கள் கலந்து கொண்டு "CH-activation and functionalization என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

முனைவர்.B.கவிதா, உதவிப்பேராசிரியை அவர்கள் சர்வதேச கருத்தரங்கில் (SWAP-2023) கலந்து கொண்டு தனது ஆய்வுக் கட்டுரையை சமர்பித்துள்ளார். மேலும் இணையவழி பயிற்சி பட்டறையிலும் பங்கு பெற்றுள்ளார். Scopus-Index Journal-லும் ஆய்வு கட்டுரை வெளியிட்டுள்ளார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் வாயிலாக ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்கான ஆராய்ச்சி மேற்பார்வையாளர் அங்கீகாரத்தினை (Reseach Supervisor Recongition) பெற்றுள்ளார்.

முனைவர்.B.கவிதா, உதவிப்பேராசிரியயை முதுகலை வேதியியல் துறை மற்றும் முனைவர்.S.சிவக்குமார், முதல்வர் அவர்கள் இருவரும் இணைந்து நடத்திய ஆய்வின் முடிவுகளை நெதர்லாண்டில் நடைபெற்ற 5வது Edition of Advanced Chemistry world Congress"-ல் சிறப்புரையாற்ற தேர்வு செய்யப்பட்டார். நடைபெற்ற சர்வதேச அளவிலான கருத்தரங்கில் முனைவர் B.கவிதா அவர்கள் இணையவழியில் சிறப்புரையாற்றியுள்ளார்.

**q. கணிதவியல் துறை (SF)**

13.09.2023 அன்று ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, ST.Joseph's கல்லூரி மற்றும் SRM Institute of science and technology கல்லூரியிலும் நடைபெற்ற கருத்தரங்கில் ம.பூச்செல்வி அவர்கள் கலந்து கொண்டார்.

நமது கல்லூரியில் சுயநிதிப்பிரிவு கணிதத்துறையில் பணிபுரியும் முனைவர்.R.நாகேந்திரன் மற்றும் முனைவர் R.லதா அவர்கள் எழுதிய "PROBABILITY AND STATISTICS" என்ற புத்தகம் 04.10.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

ISBN:978-81-964847-4-3

முனைவர்.R.நாகேந்திரன் அவர்கள் எழுதிய "TRANSFORMS AND PARTIAL DIFFERENTIAL EQUAITONS" என்ற புத்தகம் 12.03.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

ISBN:978-81-964847-0-5

**r. வரலாற்றுத் துறை (SF)**

07.08.2023-ல் தொல்லியல் வரலாறும் இலக்கியமும் எனும் தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. 06.10.2023 அன்று கீழவளவுல் தொல்லியல் களப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.27.09.2023 அன்று உலக சுற்றுலா தின விழிப்புணர்வு முகாமில் "சுருளி சாரல் விழா" விழிப்புணர்வு பேரணியில் முதுகலை மாணவர்கள் கலந்து கொண்டனர். 24.01.2024 அன்று நேதாஜி I.N.A எனும் தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது.

08.01.2024 அன்று திருச்சி Jamal Mohamed கல்லூரி, உத்தமபாளையம் HKRH கல்லூரி. கேரளா ராஜகுமாரி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் முதுகலை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**s. தமிழ்த்துறை (SF)**

தமிழ்த்துறை 50வது வியாழவட்ட நிகழ்வினை மையப்படுத்தி தொல்லியல் : இலக்கியமும் வரலாறும் என்ற தலைப்பில் 09.08.2023 அன்று ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் அரசு அருங்காட்சியகம், ஆண்டிபட்டி மாவட்ட காப்பாட்சியர் முனைவர்.B.மருதுபாண்டியன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இக்கருத்தரங்க ஏற்பாட்டினை தமிழ்த்துறையோடு இணைந்து கல்லூரி வரலாற்றுத்துறை சிறப்பாக செய்திருந்தது. முனைவர். நா.பால்பாண்டி மற்றும் முனைவர். பா.அங்கயற்கண்ணி ஆகியோருக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைப்பெற்ற பட்டமளிப்பு விழாவில் மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் முனைவர் பட்ட சான்றிதழ் பெற்றனர்.

இந்திய தேசிய தேர்வுப்பணி, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் மைசூரு மற்றும் பாரத ரத்னா டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இராமேஸ்வரம் இணைந்து நடத்திய "நுண் தேர்வு மதிப்பீடு மற்றும் தமிழில் வினாஉரு தயாரித்தல்" குறித்த பயிற்சிப் பட்டறையில் 03.01.2024 முதல் 09.01.2024 வரையிலான ஆறு நாட்கள் முனைவர்.நா.பால்பாண்டி அவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார்.

ஸ்ரீ கன்யா பரமேஸ்வரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி - சென்னை தமிழ்த்துறையால் நடத்தப்பட்ட "இணையவழி தேசிய ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி"-யிலும் அரசு கலைக்கல்லூரி மேலூரில் நடத்தப்பட்ட பன்னாட்டு கருத்தரங்கிலும் முனைவர்.நா.பால்பாண்டி மற்றும் பேராசிரியை சே.மாசிலாமணி அவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளனர்.

19.02.2024 அன்று தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் ஹாஜி கருத்தராவுத்தர் ஹௌதியா கல்லூரி - உத்தமபாளையம் இணைந்து நடத்திய "இளையோர் இலக்கியப் பாசறை" ஒரு நாள் நிகழ்வு நடைபெற்றது. இதில் தமிழ்த்துறை மூன்றாமாண்டு மாணவர்களுடன் முனைவர். நா.பால்பாண்டி அவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளனர்.

**t. தாவரவியல் துறை: (Department of Botany)**

04.10.2023 மற்றும் 05.10.2023 ஆகிய இரண்டு நாட்கள் தாவரவியல்துறை மாணவர்கள் கடல்வாழ் ஆராய்ச்சி மையம் (CMPRI) மண்டபம், ராமேஷ்வரம் சென்று ஆல்கா சேகரிப்பு பணியில் கலந்து கொண்டனர். 30.01.2024, 31.01.2024 ஆகிய இரு நாட்களில் பயிர் இனப்பெருக்கம் மறறும் மரபியல் துறை சார்பில் நடைபெற்ற பயிற்சி பட்டறையில் முனைவர்.J.அருள்ராஜ் அவர்கள் கலந்து கொண்டார். 13.10.2023 அன்று

ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் நடைபெற்ற செய்முறை தேர்வில் புறத்தேர்வராக முனைவர்.J.கிருஷ்ணகுமார் அவர்கள் கலந்து கொண்டார்.

27.01.2024 மற்றம் 28.01.2024 ஆகிய நாட்களில் தமிழக வனத்துறை சார்பில் பறவைகள் கணக்கெடுப்பு பணியில் முனைவர்.J.கிருஷ்ணகுமார் மற்றும் தாவரவியல்துறை மாணவர்கள் பங்கு பெற்றனர். மேலும் இவர் "வன உயிரிகள் பாதுகாப்பு" தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

11.10.2023 முதல் 17.10.2023 வரை ஸ்ரீ குரு நாராயண கல்லூரியில் நடைபெற்ற இணையவழி கருத்தரங்கில் முனைவர்.G.ஸ்ரீகாந்த் அவர்கள் பங்கு பெற்றார்.

## 13. அரசு கல்வி உதவித்தொகை:-

நமது கல்லூரி இளங்கலை மற்றும் முதுகலை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு அரசுத்துறைகளின் மூலம் வழங்கப்படும் அனைத்து கல்விஉதவித்தொகையும் இந்த கல்வி ஆண்டும் இணையவழியில் விண்ணப்பங்கள் ஏற்றப்பட்டு மாணவ, மாணவியர்களுக்கு அரசு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 357 மாணவ மாணவியர்கள் கல்வி உதவித் தொகை பெற்றுள்ளனர்

மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறை மூலம் **155** மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை பெற்று பயன் அடைந்து உள்ளனர்.

SC/ ST Higher Education Special Scholarship **15** மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 14.மாணாக்கர் மேம்பாட்டுத்திட்டங்கள்:

### A) காந்திய சிந்தனைக் கல்வி (CGT/DGT) :

காந்திய சிந்தனைச் சான்றிதழ் மற்றும் பட்டயப் பாடத்தில் வருடம் தவறாமல் மாணவ, மாணவியர்கள் தேர்வெழுதி வெற்றி பெற்று வருகின்றனர். இக்கல்வியாண்டிலும் சான்றிதழ் மற்றும் பட்டயப் பாடத்தில் 11 மாணவர்கள் தேர்வு எழுத உள்ளனர். இம்மையத்தின் **ஒருங்கிணைப்பாளராக வணிகவியல்துறை உதவிப்பேராசிரியை முனைவர்.அ.சுஜாதா அவர்கள் பணியாற்றி வருகின்றார்.**

### B) நாட்டுநலப் பணித்திட்டம் : (N.S.S)

26.06.2023, அன்று போதை பொருள் விழிப்புணர்வு பேரணியும், 27.06.2023 அன்று மருத்துவ முகாம், இரத்ததான முகாம் மற்றும் 28.06.2023 அன்று புற்றுநோய் விழிப்பணர்வு பேரணியும் நடைபெற்றது.

29.08.2023 அன்று தேசிய விளையாட்டு தினம் கொண்டாடப்பட்டது. 24.09.2023 அன்று எனது மண், எனது நிலம், மண் வளம் மேம்பாடு போன்ற நிகழ்ச்சிகள் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர்கள் நடத்தினார்கள்.

11.12.2023 மற்றும் 17.12.2023 அன்று வாக்குரிமை தினம் நமது கல்லூரியில் மிகச் சிறப்பாக நடைப்பெற்றது அன்று எயிட்ஸ் நோய் உறுதிமொழியும் எடுக்கப்பட்டது.

14.09.2023 அன்று தீயணைப்பு துறையுடன் இணைந்து நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர்கள் தீயை அணைக்க கூடிய முறைகளை கற்றுக் கொண்டனர்.

15.09.2023 அன்று நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் தலைமையில் கும்பக்கரை அருவியை சுத்தம் செய்து போதைப் பொருள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

05.10.2023 போடி மின்மயானத்தை சுத்தம் செய்து மரங்களை நட்டனர். 06.10.2023 அன்று போதைப்பொருள், நெகிழி பை ஒழிப்பு, உன் ஒட்டு உன்உரிமை என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. 10.01.2024 அன்று அரசு பள்ளிகளுக்கு சென்று உயர்கல்வி மேம்பாட்டை பற்றி விழிப்புணர்வு நடத்தினார்கள்.

23.02.2024 மற்றும் 29.02.2024 7 நாட்கள் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் குரங்கணியிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் நடைபெற்றது.

21.03.2024 அன்று உலக காடுகள் தினத்தை முன்னிட்டு நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர்கள் கல்லூரியை சுத்தம் செய்து மரங்களை நட்டு வைத்து உலக காடுகள் தினத்தை கொண்டாடினார்கள். இதன் ஒருங்கிணைப்பாளர்களாக முனைவர்.சி.பழனிவேல்ராஜன், முனைவர்.ஜி.கருப்புசாமி, முனைவர்.ஏ.ஆர்.மணிகண்டன், முனைவர்.வி.விமலா, முனைவர்.டி.இராமலட்சுமி, திருமதி.பி.சுகுணாசெல்வராணி ஆகியோர் செயல்பட்டு வருகிறார்கள்.

## C) Extension Activities : (Value Added Course)

ஒரு மாணவனுக்கு படிப்பைத் தவிர, அவரவர் விருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட துறையில் தனித்திறமையை வளர்க்க, வேலைக்குச் செல்வோர், சுயதொழிலில் ஈடுபடுவோர், ராணுவம், போலீஸ், விளையாட்டில் ஈடுபடுவோர் மற்றும் நுண்கலை என்று சொல்லக் கூடிய பல்வகைக் கலைகளில் ஈடுபடுவோர் என்று முதலாமாண்டு மாணவ, மாணவியர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து அவர்களுக்கு வாரம் ஒரு முறை சிறப்பு வகுப்புகள் பேராசிரியர்களால் நடத்தப்படுகின்றது. இதன் பயனாக நமது கல்லூரியில் 3 ஆண்டுகள் முடித்து வெளியே செல்லக் கூடிய ஒவ்வொரு மாணவனும், ஒரு துறையில் சிறந்து விளங்கி, தமது வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பதில் பெருமை

கொள்கிறேன். முதலாமாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மாணவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் Part IV புதன்கிழமையன்று Value added course நடத்தப்படுகிறது.

## 1. நுண்கலை மன்றம்

77வது சுதந்திர தினவிழாவில் நமது கல்லூரி நுண்கலை மன்ற மாணவ, மாணவியர்கள் ஒருங்கிணைந்து 15.08.2023 அன்று தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் விதமாய் சிறப்பான நடன நிகழ்வை வழங்கினார்கள்.

10.06.2023 அன்று தேனி நேரு யுவ கேந்திரா சார்பாக நடத்தப்பட்ட தேனி மாவட்ட அளவிலான கலை இலக்கியப் போட்டியில் கலந்து கொண்டு நமது நுண்கலைமன்ற மாணவர் ஆசதீஸ்குமார் , இரண்டாமாண்டு வேதியியல் துறை மாணவர் பேச்சுப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்று வெற்றி பெற்றார்.

## 2. ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி கழகம்:

நமது கல்லூரியில் "ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி கழகம்" பாடத்தில் 29 மாணவ, மாணவியர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர். உலக யோகா தினம் அன்று அனைவருக்கும் யோகாசன பயிற்சி மற்றும் மூச்சுப் பயிற்ச்சியும் அளிக்கப்பட்டது. **ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி கழக ஒருங்கிணைப்பாளராக முனைவர்.அ.மகேஸ்வரன் அவர்கள் சிறப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.**

## 3. மனித உரிமைகள் கழகம் (Human Rights)

03.10.2023 அன்று "HUMAN RIGHTS" சார்பாக இக்குழுவில் உள்ள உறுப்பின மாணவ, மாணவியருக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் புதிய கருத்தரங்கு அரங்கில் நடைபெற்றது. இதில் செல்வி D.அனுராதா அவர்கள் சிறப்பு சொற்பொழிவு ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய சட்டங்கள் மற்றும் பெண்களின் உரிமையும், விழிப்புணர்வும் பற்றி மாணவர்களிடம் எடுத்துரைத்தார்.

04.10.2023 அன்று தேனி மாவட்ட நீதி மன்ற வழக்கறிஞர் திரு.P.பிரபு அவர்கள் தொழிலாளர்களின் சட்டம் பற்றியும் அதன் அத்தியாவசியம் பற்றியும் மாணவர்களிடம் சொற்பொழிவு ஆற்றினார். மனித உரிமைகள் கழக ஒருங்கிணைப்பாளராக வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் Dr.K.வனித்தீஸ்வரி அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## 4. நுகர்வோர் மன்றம் (Consumer Club)

நுகர்வோர் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக **முனைவர்.D.ஹேமா** அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

உலக நுகர்வோர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வணிகவியல்துறையைச் சார்ந்த பவித்ரா இரண்டாம் ஆண்டு மாணவி 2 ஆம் இடம்

பரிசையும் சான்றிதழையும் பெற்றார்.கட்டுரைப் போட்டியில் பொருளியல்துறையைச் சார்ந்த முதலாம் ஆண்டு மாணவி ரபிஷா பங்கு பெற்று சான்றிதழைப் பெற்றார்.காட்சிப்படுத்துதல் போட்டியில் கணினி அறிவியல் துறையைச் சார்ந்த இரண்டாம் ஆண்டு மாணவி அஸ்மிதா பங்கு பெற்று சான்றிதழைப் பெற்றார்.

12.02.2024-இல் நமது கல்லூரியில் நுகர்வோர் மன்றம் சார்பாக "நுகர்வோர் உரிமைகள் மற்றும் விழிப்புணர்வு" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக சிவகங்கை அரசினர் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியை முனைவர்.R.ஹேமமாலினி அவர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றினார்.

## 5. Youth Red Cross (YRC) & Red Ribbon Club (RRC)

25.09.2023 அன்று நமது கல்லூரியில் செஞ்சிலுவை சங்கம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், லயன்ஸ் கிளப் மற்றும் பெரியகுளம் அரசு மருத்துவமனை இணைந்து நடத்திய இரத்ததான முகாமில் சுமார் 100 மாணவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர். மேலும் பரிசோதனை முகாமில் மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு உடல் மற்றும் கண் பரிசோதனை செய்து பயனடைந்தனர். மேலும் அத்துடன் cancer பற்றிய விழிப்புணர்வு முகாமும் நடைபெற்றது.

RRC,YRC சார்பாக கல்லூரியில் உள்ள அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மாதந்தோறும் இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ALBLENDAZOLE மாத்திரைகள் வழங்கப்பட்டது. இதன் ஒருங்கிணைப்பாளராக கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.வி.ஹேமலதா அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## 6. அறிவியல் தகவல் தொடர்பு கழகம் :

அறிவியல் தகவல் தொடர்புக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளராக முனைவர்.அ.சுபலட்சுமி அவர்கள் பணியாற்றுகிறார். இக்கல்வியாண்டில் "தேசிய அறிவியல் தின விழாவை" முன்னிட்டு 16.02.2024-ஆம்தேதி "அறிவியல் மனப்பான்மை" என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் KMC பேராசிரியர் நரேந்திர நாயக், சிறப்புரையாற்றினார்.

## 7.தாத்தா பாட்டி குழு

நமது கல்லூரியில் தாத்தா பாட்டி மாணவர்க் குழு சார்பாக 11.09.2023 அன்று "உலக முதியோர் தினம்" கொண்டாடப்பட்டது. நமது கல்லூரியின் முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் அவர்களின் தலைமையில் மாணவ, மாணவியர்களுக்கு

கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப் போட்டி, நாடகம் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் சுமார் 63 மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு 12.09.2023 அன்று பரிசுகள் வழங்கப்பட்டது. இதன் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல்துறை உதவிப்பேராசிரியர் திருமதி.இ.பாப்புலட்சுமி அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

### 8. ECO Club

நமது கல்லூரியில் பயிலும் பல்வேறு துறையைச் சார்ந்த இரண்டாம் வருட மாணவ, மாணவியர்கள் Extension Activites - சுற்றுப்புறசூழல் பிரிவில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் எடுக்கப் பெற்று அதன் மூலம் அறிந்து கொண்டதை Assignment மற்றும் Projects மூலம் மாணவ, மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்டதை மதிப்பீடு செய்யப்பட்டன.

### 9. Disaster Management:

Disaster Mangement கழகத்தின் ஒருங்கிணைப்பாளராக முனைவர்.ஜி.இரவீந்திரன் அவர்கள் பணியாற்றுகிறார். இரண்டாம் வருட மாணவ, மாணவியர்களுக்கு வகுப்புகள் எடுக்கப்பட்டு வருகிறது.

### 10. Library & Information Science

Library & Information Science கழகத்தின் ஒருங்கிணைப்பாளராக முனைவர்.ஜி.மங்கை, நூலகர் அவர்கள் பணியாற்றுகிறார். 01.03.2024 அன்று நூலக விமர்சனம் நடத்தப்பட்டது. இதில் சொக்கலிங்கம் பிரகாசம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அவர் எழுதிய வேதங்களில் உடற்கூறியல் என்ற நூலைப் பற்றி எடுத்துக் கூறினார். கல்லூரியின் மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். நூலகம் சார்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்த்துறைத் தலைவர் உதவிப்பேராசிரியர் முனைவர்.லெ.அலமேலு அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

## D. மாற்றுத் திறனாளிகள் (திவ்யஜன) நலத்திட்டம் :

இந்த திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல் துறை பேராசிரியர் இ.பாப்புலட்சுமி செயல்பட்டு வருகிறார்.

திவ்யஜன் நலத்திட்டம் சார்பாக 03.10.2023 அன்று "DIVYANGJAN & THE SOCIETY" என்ற தலைப்பில் A.அனுராதா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார். இவ்விழாவில் நமது கல்லூரியில் பயிலும் 7 மாற்றுத்திறனாளி மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## E. மகளிர் மையம் :

22.07.2023 அன்று மகளிர் மையத்தின் சார்பாக அனைத்து மாணவிகளுக்கும் வாழ்வியல் நெறி குறித்த விழிப்புணர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. பெண்கள் உரிமை குறித்தும், பெண்களுக்கான சட்டங்கள், உரிமைகள் குறித்தும் மகளிர் மையத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் சிறப்பாக எடுத்துரைத்தனர்.

போடி அரசுமருத்துவமனை, பெரியகுளம் மருத்துவமனை, லயன்ஸ்கிளப் மற்றும் மகளிர் மையம் இணைந்து 25.09.2023 அன்று மாபெரும் இலவச ஒரு நாள் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் அனைவரும் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

14.10.2023 முதல் 22.10.2023 வரை நமது கல்லூரியில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் புத்தாண்டு விழா 21.12.2023 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. பேராசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஏசு கிறிஸ்து பற்றியும், புத்தாண்டு வாழ்த்து செய்தியும் கூறினார்கள். கல்லூரி முதல்வர் சிவக்குமார் மற்றும் கணிதத்துறைத் தலைவர் மகேஷ்வரன், வேதியியல் துறைத்தலைவர் குமரராஜன் அவர்கள் தலைமை தாங்கி கேக் வெட்டி மாணவ மாணவியர்களுக்கு வழங்கினார்கள்.

நமது கல்லூரியில் 12.01.2024 அன்று தைப்பொங்கல் சங்கமம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் 15 அன்று நமது கல்லூரியில் மகளிர் மையத்தின் சார்பாக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

## F. Equal Opportunity Cell

நமது கல்லூரி பல்கலைக்கழக மானியக்குழு ஒப்புதலுடன் Equal Opportunity Cell 20.07.2012 முதல் இயங்கி வருகிறது. இதனுடயை ஒருங்கிணைப்பாளராக **முனைவர்.G. தங்கதுரை** வணிகவியல்துறை உதவிப்பேராசிரியர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். இந்த அமைப்பு அவ்வப்பொழுது மாணவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து வருகிறது.

## G. பகடிவதை தடுப்பு சட்டம் (Anti Ragging Cell)

நமது கல்லூரியில் பகடிவதை நடைபெறாவண்ணம் மாணவர்களுக்கு Councelling வழங்கப்பட்டுள்ளது. கல்லூரி வளாகம் முழுவதும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டும் 18001805522 பகடிவதை புகார் எண்கள் 1027, 1098 மாணவர்களுக்குத் தெரியும் வண்ணம் அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டுள்ளது.

நமது கல்லூரியில் இது நாள் வரை பகடிவதை தொடர்பான புகார்கள் எதுவும் இல்லை என்று ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக இயற்பியல்துறை இணைப்பேராசிரியர் முனைவர்.G.ராஜ்மோகன் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## H. Internal Complaints Committee (ICC)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழ் நமது கல்லூரியில் உள் புகார்கள் குழு இயங்கி வருகிறது. பணிபுரியும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை தடுப்பதும், அப்பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதும் இக்குழுவின் நோக்கமாகும். நமது கல்லூரியின் உள்புகார்கள் குழு (ICC) முனைவர்.க.நித்தியானந்தகுமாரி, கணினி அறிவியல்துறை இணைப்பேராசிரியர் அவர்களை தலைவராகவும் மற்றும் முனைவர்.ஆர்.முருகேசன், கணினி அறிவியல்துறைத் தலைவர், முனைவர்.ஏ.ஞானசேகரன் வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர்.ஜி.மங்கை நூலகர் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. கடந்த 30.08.2023 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பெண்கள் பயில்வு மையம் சார்பாக 'sexual harassment of Women at Work place" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் எமது கல்லூரியின் ICC-யின் உறுப்பினர் முனைவர்.ஜி.மங்கை நூலகர் அவர்கள் கலந்து கொண்டார்.

## I. E-content Development

நமது கல்லூரியின் E-content Development Centre-ன் ஒருங்கிணைப்பாளராக கணிணி அறிவியல் துறை இணைப்பேராசிரியை, முனைவர்.க.நித்தியானந்தகுமாரி, உள்ளார். அனைத்துப் பாடங்களிலும் E-content உருவாக்குவதை ஊக்குவித்தல், E-content உருவாக்கத்தில் ஆசிரியர்கள் மற்றும் நிபுணர்களுக்கு பல்வேறு வளங்களை உருவாக்குதல், பல்வேறு முறைகள் மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு E-content-ஐ கிடைக்கச் செய்தல் இதன் நோக்கமாகும்.

## J.Swayam/MOOC's Course

கல்லூரியில் மொத்தம் 22 மாணவ, மாணவியர்கள் Secondary Accountancy என்ற பாடத்தில் Swayam Course-ல் சோந்து தங்களை பதிவு செய்து படித்து கொண்டு உள்ளார்கள். Elementary Education என்ற பாடத்தில் 21 மாணவ, மாணவியர்கள்

Swayam Course-ல் பதிவு செய்து படித்து கொண்டு உள்ளார்கள். மொத்தம் 43 மாணவ, மாணவியர்கள் Swayam Course-ல் சேர்ந்து படிக்கின்றனர்.

## K. தொழில் முனைவோர் மையம் (EDC)

இதன் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல்துறை பேராசிரியர் முனைவர்.வீ. கிருஷ்ணகுமார் அவர்கள் செயல்பட்டு வருகிறார். 22.09.2023 ஆம் தேதி தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தின் சார்பில் ஒரு நாள் மதிப்பு கூட்டபட்ட வாழை நார் பொருட்கள் பற்றி களஆய்வு நிகழ்வு சின்னமனூரில் உள்ள கவின் கிரின் கிகோ புராடக்ட்ஸ் நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இம்மையம் மற்றும் கவின் கிரின் கிகோ புராடகட்ஸ் நிறுவனத்திற்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

19.10.2023 அன்று வாழை நார் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் பயிற்சியினை முடித்தவர்களில் ஆர்வம் உள்ள 20 மாணவிகளை தேர்ந்தெடுத்து அவர்களின் மூலம் இரண்டு தொழில் குழுக்கள் தொடங்கப்பட்டு, இதற்காக தொழில் ரீதிய வாய்ப்புகள் மற்றும் அடுத்த கட்ட பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டு வங்கிகளின் மூலம் நிதி பெற்று தொழில் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் மகிளா திட்டத்தின் மூலம் தொழிற்கடன் பெறுவதற்கு அருகில் உள்ள இந்தியன் வங்கி மற்றும் கனரா வங்கிகளின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான விண்ணபங்கள் மற்றும் திட்ட அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டுள்ளது.

நிரல் திருவிழா- வில் பேராசிரியர் ஜெகதீஸ் அவர்கள் Montor Training 07.12.2023 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது அதில் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வந்தார்.

12.01.2024 அன்று கல்லூரியில் நிரல் திருவிழா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, தேனி மாவட்ட ஆட்சியரின்அறிவுறுத்தல்படி மாணவர்களுக்கு முனைவர் கிருஷ்ணகுமார் மற்றும் திரு.ஜெகதீஸ் அவர்களும் இணைந்து நடத்தினர். இதில் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தின் முந்தய உறுப்பினர்கள் மற்றும் தற்போதைய உறுப்பினர்களை கொண்டு முத்ரா, தாட்கோ மற்றும் EDII-யின் மூலம் தொழில் தொடங்குவதற்கு நிதி உதவி பெறுவதற்று திட்ட அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டுள்ளது.

20.03.2024 அன்று நிரல் திருவிழா என்ற தமிழக அரசின் திட்டத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, புதிய தொழில்களுக்கான Idea-க்கள் பெறப்பட்டு தேனி மாவட்டத்தில் நமது கல்லூரியின் சார்பாக 3 Idea-க்கள் போட்டிக்கு

அனுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது Idea-க்கள் தேர்ந்தெடுக்கப்பட்டலாம் 3 லட்சங்கள் முதல் 7 லட்சங்கள் வரையில் அந்த மாணவர்கள் தொழில் தொடங்குவதற்கு நிதி உதவி பெற வாய்ப்பு உள்ளது.

## L. Industry – Institute Collaboration MOU

நமது கல்லூரியின் Industry Institute Collaboration MOU-ன் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல்துறை உதவிப்பேராசிரியை, முனைவர்.எஸ்.விஜயலெட்சுமி அவர்கள் உள்ளார்.

2023-2024 கல்வியாண்டில் வணிகவியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறையின் சார்பாக ஸ்ரீ விநாயகா கார்மெண்ட்ஸ் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து அதன் வாயிலாக 27 மாணவர்களுக்கு தொழில் சம்பந்தமான ஆலோசனை மற்றும் பயிற்சி வழங்கப்பட்டது.

EDC (Entrepreneural Development centre) சார்பில் ஏல விவசாயிகள் சங்க கல்லூரி மற்றும் கவின் ஏகோ கீரின் ப்ரோடுக்ட் (Kavin Eco Green Products) கருச்சிபட்டி அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து EDC 75 மாணவர்களுக்கு வாழை நார் பொருள் உற்பத்தி பயிற்சி மற்றம் தொழில் தொடங்க ஆலோசனை வழங்கப்பட்டது.

கணினி துறை சார்பாக ஏல விவசாயிகள் சங்க கல்லூரி மற்றும் CSC Computer Education(P) Lts உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து அதன் மூலம் கணினி துறை மூன்றாம் ஆண்டு 38 மாணவர்களுக்கு Project மற்றும் அதற்கான ஆலோசனை வழங்குகிறது.

Career Guidance சார்பாக ஏல விவசாயிகள் சங்க கல்லூரி மற்றும் Kuriniji Technology soluction Pvt Ltd உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து மாணவர்களுக்கு கணினி மென்பொருள் தொழிற்பயிற்சி மற்றும் அதற்கான வேலை வாய்ப்பினை உருவாக்கி தருகிறது.

## M. Staff Grievances Redressal Cell:

நமது கல்லூரியில் ஆசிரியர் - அலுவலர் குறை தீர் மன்றத்தின் மூலமாக ஆசிரியர் - அலுவலர் பல்வேறு குறைகளை கேட்டறிந்து அவைகளுக்கு மிகச் சிறந்த முறையில் மூத்தப் பேராசிரியர்கள் மற்றும் முதல்வர் அவர்களின் ஆலோசனைகளின்படி தீர்வு காணப்பட்டது. இந்த மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக **Dr. S.** பாலமுருகன், துணை முதல்வர் மற்றும் வணிகவியல் துறைத்தலைவர், அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு

ஆசிரியர், அலுவலரின் நலனில் அக்கறை கொண்டு ஆசிரியர்-அலுவலர் குறை தீர் மன்றத்தின் வளர்ச்சிக்காக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

## 22. போதைப் பொருள் பயன்பாடு எதிர்ப்பு (Anti Drug Abuse)

நமது கல்லூரி NCC, NSS மற்றும் ZKM மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், போடிநாயக்கனூர் காவல்துறை அதிகாரிகளுடன் இணைந்து 26.06.2023 அன்று போடிநாயக்கனூர் பேருந்து நிலையம் முதல் நகராட்சி அலுவலகம் வரை சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மாபெரும் போதைப்பொருள் ஒழிப்பு பேரணி நடைபெற்றது. பேரணியை நமது கல்லூரி முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் அவர்கள் தொடங்கி வைத்தார். பேரணியில் கல்லூரி துணை முதல்வர் முனைவர்.எஸ்.பாலமுருகன், NSS திட்ட அலுவலர்கள் மற்றும் 200 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பொன்விழா ஆண்டு தொடக்கம் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு சம்பந்தமாக நமது கல்லூரியில் தேனி மாவட்ட அளவிலான மினி-மாரத்தான் 19.07.2023 அன்று நடத்தப்பட்டது, இந்நிகழ்ச்சியில் நமது கல்லூரி தலைவர் எஸ்.வி.சுப்பிரமணியன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் அவர்கள் வரவேற்றுப் பேசினார். இந்நிகழ்ச்சியில் நமது கல்லூரி உப-தலைவர் திரு.எஸ்.ராமநாதன், கல்லூரிச் செயலாளர் திரு.ஆர்.புருஷோத்தமன் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியை போடி டவுன் காவல் ஆய்வாளர் பி.ராமலட்சுமி அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த போட்டியில் நமது கல்லூரியைச் சார்ந்த 600 மாணவ, மாணவியர்களும், தேனி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து 50 விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்கு இன்ஸ்பெக்டர் பி.ராமலட்சுமி, போக்குவரத்து ஆய்வாளர் சிஜீத்குமார்ஆகியோர் பரிசு வழங்கினர். இந்நிகழ்வில் நமது கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள், நிருபர்கள் கலந்து கொண்டனர். கல்லூரி துணை முதல்வர் முனைவர்.எஸ்.பாலமுருகன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

08.12.2023 அன்று தேனி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு அதிகாரிகளால் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு மினி-மாரத்தான் ஓட்டப்பந்தயம் நடத்தப்பட்டது. போட்டியை டி.ஆர்.ஓ.துவக்கி வைத்தார். தேனி பழைய பஸ் ஸ்டாண்டில் துவங்கி, மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நிறைவடைந்தது. வெற்றி பெற்றவர்களுக்கும், ஓட்டப்பந்தய வீரர்களுக்கும் தேனி மாவட்ட ஆட்சியர் பரிசுகளை வழங்கினார். நமது கல்லூரி மாணவர்கள் 15 பேர் கலந்து கொண்டனர்.

போடிநாயக்கனூர் காவல்துறை அதிகாரிகளுடன் இணைந்து 11.08.2023 அன்று போடிநாயக்கனூர் பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான விழிப்புணர்வு

நிகழ்ச்சியை நமது போதைப் பொருள் எதிர்ப்புக் கழகம் ஏற்பாடு செய்தது. இந்நிகழ்ச்சியை முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் அவர்கள் தொடங்கி வைத்தார். கல்லூரியின் துணை முதல்வர் முனைவர்.எஸ்.பாலமுருகன் வரவேற்புரை ஆற்றினர். போடிநாயக்கனூர் துணைக் காவல் கண்காணிப்பாளர் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் 600 மாணவர்களும் 70 பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## N. முன்னாள் மாணவர் சங்கம்

ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. 09.12.2021-முதல் முன்னாள் மாணவர் சங்கம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பெரியகுளத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

இச்சங்கத்தின் தலைவராக தணிக்கையாளர் திரு.ஜெகதீசன், செயலராக கல்லூரியின் துணை முதல்வர் முனைவர்.எஸ்.பாலமுருகன், பொருளராக முனைவர்.கே.கிருஷ்ணன் மற்றும் 13 நிர்வாக குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

## 15. தேசிய மாணவர் படை (NCC)

23.09.2023 அன்று கல்லூரி வளாகத்தில் NCC & NSS நடத்திய ரத்ததான முகாமில் தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர்.

மேலும் கும்பக்கரை அருவி மற்றும் கொடைக்கானல் சாலையில் கொடைக்கானல் வனத்தறையுடன் இணைந்து பிளாஸ்டிக் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியையும், மரம் நடும் நிகழ்ச்சியையும் நடத்தினர்

22.12.2023 முதல் 31.12.2023 வரை புஸ்பத்தூரில் உள்ள ஸ்ரீ வித்யாமந்திரில் நடைபெற்ற வருடாந்திர பயிற்சி முகாமில் 26 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

04.01.2024 முதல் 15.01.2024 வரை உத்யப்பூரில் உள்ள NCC குழுமத் தலைமையகத்தில் நடைபெற்ற EK பாரத் ஷ்ரேஷ்ட பாரதத்தில் கல்லூரி NCC கேடட் இரண்டாம் ஆண்டு பொருளாதார மாணவர் விஸ்வா கலந்து கொண்டார்.

NCC கேடட்கள் 12.02.2024 & 11.03.2024 உத்தமபாளையம் HKRH கல்லூரியில் நடைபெற்ற ஒரு நாள் NCC தேர்வு பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் G.T.N. கல்லூரியில் நடைபெற்ற NCC சான்றிதழ் "பி" தேர்வை 16 தேசிய மாணவர் படை மாணவர்கள் எழுதினர். மேலும் 11 தேசிய மாணவர் படை மாணவர்கள் "சி" தேர்வையும் எழுதினர்

## 16. உடற்கல்வித் துறை

நமது கல்லூரியில் உடற்கல்வித்துறை சார்பாக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற C Zone போட்டியில் பல்வேறு குழுக்களாக டேபிள் டென்னிஸ், சதுரங்கம், பூபந்து, கிரிக்கெட் மற்றும் கபடி உள்ளிட்ட போட்டிகளில் கலந்து கொண்டனர். 2023 - 2024ஆம் கல்வியாண்டிற்கான மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற C Zone போட்டியில் கால்பந்து, வாலிபால், கைபந்து போன்ற போட்டிகளிலும் குழுக்களாக மாணவர்கள் பங்கு பெற்றனர். இதில் நம் கல்லூரி மாணவர்கள் மிகவும் பாராட்டத்தக்க பல சாதனைகளைச் செய்துள்ளனார்.

சதுரங்கம் :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 29.08.2023 மற்றும் 30.08.2023 அன்று நமது கல்லூரியில் சதுரங்கப் போட்டி நடைபெற்றது.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் 07.09.2023 முதல் 09.09.2023 வரை நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டலங்களுக்கு இடையேயான சதுரங்கப் போட்டியில் எங்கள் கல்லூரி சதுரங்க அணி பங்கேற்றது.

பூப்பந்து :

நமது கல்லூரியில் 29.08.2023 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே நடைபெற்ற பூப்பந்து போட்டியில் நம் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். நமது கல்லூரி அணி காலிறுதிக்கு முன்னேறியது.

கால் பந்து :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 13.09.2023, 14.09.2023 அன்று திண்டுக்கல் ஜி.டி.என் கல்லூரியில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் நம் கல்லூரி கால்பந்து அணி வீரர்கள் கலந்து கொண்டனர். நமது கல்லூரி கால்பந்து அணி அரையிறுதிக்கு முன்னேறியது. நமது கல்லூரி அணி வீரர்கள் எஸ்.யோகேஷ், மற்றும் ஜி.ராம்குமார் ஆகியோர் மண்டலங்களுக்கு இடையே தேர்வு பெற்றனர்.

கைப் பந்து :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 18.09.2023, 19.09.2023 அன்று பழனி A.P.A கல்லூரியில் நடைபெற்ற கைப் பந்து போட்டியில் கலந்து கொண்டனர்.

கபடி :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 20.09.2023 அன்று GTN கல்லூரியில் நடைபெற்ற கபடி போட்டியில் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பால் பேட்மிண்டன் :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 26.09.2023 அன்று திண்டுக்கல் எஸ்.எஸ்.எம். கல்லூரியில் நடைபெற்ற பால் பூப்பந்துப் போட்டியில் நம் கல்லூரி பால் பேட்மிண்டன் அணி வீரர்கள் கலந்து கொண்டனர். முதலாமாண்டு வணிகவியல்துறை மாணவர் E.முத்துப்பாண்டி மற்றும் மூன்றாமாண்டு வணிகவியல்துறை மாணவர் A.மணிமாறன் ஆகியோர் மண்டலங்களுக்கு இடையேயான தேர்வைப் பெற்றனர்.

மட்டைப்பந்து :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 09.10.2023 முதல் 11.10.2023 அன்று திண்டுக்கல் GTN கல்லூரியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் நம் கல்லூாரி மாணவர்கள் பங்கேற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றனர்.

கராத்தே :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டல அணிகளுக்கிடையே 30.09.2023 அன்று மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற கராத்தே போட்டியில் நம் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். இதில் 47-50 கிலோ எடைப்பிரிவில் நமது கல்லூரி BCA இரண்டாமாண்டு மாணவர் பி.முஹம்மது பிலால் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

தடகளம் :

27.10.2023 மற்றும் 28.10.2023 ஆகிய தேதிகளில் மதுரை M.G.R மைதானத்தில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக தடகளப் போட்டியில் நமது கல்லூரி விளையாட்டு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சிலம்பம் :

நமது கல்லூரி சிலம்ப வீரர் சி.சுரேந்தரபாண்டியன் 25.02.2024 அன்று சோழன் உலக சாதனை புத்தகத்தில் சிலம்பம் குச்சியில் உலக சாதனையை பதிவு செய்துள்ளார்.

நமது கல்லூரி சிலம்ப வீரர் கே.மணிமாறன் 11.02.2024 அன்று NOBEL WORLD RECORDS இல் Serial light silambak Stick Rotation-இல் உலக சாதனையை பதிவு செய்துள்ளார்.

நமது கல்லூரி சிலம்ப வீரர் கே.வீரபாபு 11.02.2024 அன்று NOBEL WORLD RECORDS இல் Serial light silambak Stick Rotation-இல் உலக சாதனையை பதிவு செய்துள்ளார்.

10.06.2023 முதல் 12.06.2023 வரை குவாலியரில் உள்ள சரஸ்வதி சிசு மந்திர் சிபிஎஸ்இ பள்ளியில் நடைபெற்ற 7வது இளைஞர் விளையாட்டு தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் நமது கல்லூரி சிலம்ப வீரர் கே.மணிமாறன் தங்கப்பதக்கம் வென்றார். மேலும் இரட்டை குச்சி சிலம்பம் போட்டியில் தங்கம் வென்றார்.

14.10.2023 முதல் 15.10.2023 வரை தஞ்சாவூரில் உள்ள பாரத் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டியிலும், குச்சி வாள்வீச்சிலும் வெள்ளி வென்றார்.

**17.கல்லூரி விளையாட்டு விழா :**

நமது கல்லூரி தலைவர் எஸ்.வி.சுப்பிரமணியன், உபதலைவர் திரு.எஸ்.இராமநாதன், கல்லூரி செயலாளர் திரு.ஆர்.புருஷோத்தமன் அவர்கள் முன்னிலையில் நமது கல்லூரியின் 50வது விளையாட்டு விழா நமது கல்லூரி மைதானத்தில் 13.03.2024 அன்று நடைபெற்றது. நமது கல்லூரியின் நிர்வாக குழு உறுப்பினர் முனைவர்.P.சிவப்பிரகாஷம் அவர்கள் கொடி அசைத்து விழாவினை துவக்கி வைத்தார் நமது கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினர் திரு.V.சொரூபன்அவர்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றினார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர் **போடி காவல்துறை ஆய்வாளர் உயர்திரு.P.கோபிநாத்அவர்கள்** பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டினார். கல்லூரி முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். துணைமுதல்வர் முனைவர்.எஸ்.பாலமுருகன் அவர்கள் சிறப்புரையாற்றினார். விளையாட்டுத்துறை இயக்குநர் முனைவர்.K.சிவா ஆண்டறிக்கையை வாசித்தார். இவ்விழாவில் நமது கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கு பெற்றனர்.

## 18. பொது நூலகம்

நமது கல்லூரி நூலகத்தில் மொத்தம் **28884** நூல்கள் உள்ளன. இவ்வாண்டு நமது கல்லூரி நூலகத்திற்கு நன்கொடை மூலமாக 534 புத்தகங்ள் ரூ.132871 மதிப்பில் நூலகத்தில் பெறப்பட்டுள்ளன. 12 ஜோர்னல்ஸ் ரூ.35600 சந்தா கட்டப்பட்டுள்ளது. மின்னணு புத்தகங்கள் மற்றும் மின்னணு ஜோர்னல்ஸ் படிப்பதற்காக டெல்னெட்

(DELNET) மற்றும் NLIST என்ற டிஜிட்டல் லைப்ரரி என்ற அமைப்பின் மூலமாக பெறப்பட்டுள்ளன. இரண்டிற்கும் சேர்த்து ஆண்டு சந்தா ரூ.25370 கட்டப்பட்டுள்ளது.

மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் வகையில் (OPEN ACCESS SYSTEM) தாங்களே தெரிவு செய்து கொள்ளும் செயல்முறை பின்பற்றப்படுகிறது. கணினி முறையில் புத்தகப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. தினசரி, வாரம், மாதம் ஒருமுறை, இருமுறை இதழ்களும் வாங்கப்படுகின்றன.கல்லூரியை பற்றி தெரிந்து கொள்ளும் விதமாக பள்ளி மாணவ, மாணவியர் பங்கு பெற்ற நிகழ்வில் நூலகத்திற்கு பார்வையிட வந்தனர். அவர்களுக்கு நூலகம் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.

"நூலகத்தில் அடுத்த தலைமுறைக்கான நூலகம்" என்ற குறிக்கோளின் கீழ் பிராட்ரிட்ஜ் நிறுவனம் மற்றும் ஹனிகிங்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் கொடுக்கப்பட்ட 15 மடிக்கணினிகளை ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் தங்களுக்கு தேவையான சமயத்தில் எடுத்து பயன் பெற்றுள்ளனர்.

நூலக தினத்தை கொண்டாடும் வகையில் மாணவ, மாணவியர்களுக்கு நினைவாற்றல் போட்டி, புத்தகங்களை கண்டுபிடித்தல் போட்டி, புத்தக விமர்சனம், கவிதைப் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வகையில் நூலகத்தை பயன்படுத்தியமைக்காக Best Library user Award வழங்கப்படுகிறது.

## 19. விடுதிகள் : மாணவர் விடுதி

நமது கல்லூரி விடுதிக் காப்பாளராக முதல்வர் அவர்களும், துணைக்காப்பாளராக கணிப்பொறி அறிவியல் துறை, இணைப்பேராசிரியர் **முனைவர் R. முருகேசன்** அவர்களும் உள்ளிருப்பு காப்பாளராக முனைவர்.ஸ்ரீகாந்த், தாவரவியல்துறை உதவிப்பேராசிரியர் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

மாணவர் விடுதியில் தற்போது 37 வெளியூர் மாணவர்களைக் கொண்டு சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. மாணவர்களுக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்படுகின்றன. மாணவர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO) மற்றும் தினந்தோறும் தமிழ், ஆங்கில நாளிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. தொலைக்காட்சிப் பெட்டி, விளையாட்டு உபகரணங்கள் போன்று மாணவர்களுக்குப் பல வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

## 20. போக்குவரத்துத்துறை (Transport Department)

நமது கல்லூரியில் **ரூ.40 லட்சம்** மதிப்பிலான 8 பேருந்துகள் வாங்கப்பட்டு 19.09.2012 முதல் மாணவியர்கள் கல்லூரிக்கு வந்து செல்வதற்காக இயக்கப்பட்டு

வருகிறது. மேலும் மாணவியர்கள் சிரமமின்றி கல்லூரிக்கு வந்து செல்வதற்கு தேவாரம் வழி நாகலாபுரம் மற்றும் தேவாரம் வழி திம்மிநாய்க்கன்பட்டி, உப்புக்கோட்டை, மீனாட்சிபுரம் வழி அணைக்கரைபட்டி ஆகிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பேருந்துகளில் சுமார் 1000 மாணவியர்கள் தினந்தோறும் கல்லூரிக்கு வந்து பயன்பெறும் வகையில் இயக்கப்படுகிறது. மேலும் கல்லூரிகளுக்கு இடையே நடைபெறுகின்ற கருத்தரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு விருப்பமுள்ள மாணவ, மாணவியர்களை நமது கல்லூரிகள் மூலம் பாதுகாப்பாக அழைத்து சென்று கலந்து கொண்டு வரப்படுகிறது. இவ்விதம் பேருந்துகள் வாங்க நிதியளித்த ஏல விவசாயிகள் சங்கத்திற்கும் அதன் தலைவர் **உயர்திரு.S.V.சுப்ரமணியன்** அவர்களுக்கும் **செயலர் திரு.R.புருஷோத்தமன், உபதலைவர் திரு.S.இராமநாதன்** அவர்களுக்கும், மற்றும் **ஆட்சிக்குழு உறுப்பினர்கள்** அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**21. கார்டோ - காம்ப் (Cardo – comp) :**

மாணவ, மாணவியர்களின் தனித்திறமையை வளர்க்கும் பொருட்டு. நம் கல்லூரியின் முன்னாள் தலைவர் மரியாதைக்குரிய R.பாலுஅழகணன் அவர்களால் Cardo-comp ஏற்படுத்தப்பட்டு, இன்று வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாணவர்களை Cardamom House, Tea House, Coffee House மற்றும் Silk Cotton House என்று நான்கு குழுக்களாகப் பிரித்து அவர்கள் திறமைகளை வெளி கொணரும் பல வகையில் 20 வகையான போட்டிகள் நடத்தப்பட்டன. 15.03.2024 அன்று கார்டோ காம்ப் -2024 கலை விழா சிறப்பாக நிடைபெற்றது. இதில் **420** மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர்.லெ.அலமேலு அவர்கள், ஒருங்கிணைப்பாளராகவும், நூலகர் முனைவர்.ஜி.மங்கை மற்றும் உடற்கல்வி இயக்குநர் திரு.கே.சிவா அவர்கள் இருவரும் துணை ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டார்கள். நான்கு குழுக்களின் தலைவர்களாக பேராசிரியர்கள் முனைவர்.அ.சுஜாதா, முனைவர்.வீ.ஹேமலதா, முனைவர்.கே.கிஷோர்குமார், முனைவர்.ஏ.ஆர்.மணிகண்டன் ஆகியோர்கள் செயல்பட்டனர். அனைத்து போட்டிகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

**23. பணிஓய்வு பெற இருப்போர் :**

நமது கல்லூரியின் கணிதத்துறைத்தலைவர் முனைவர்.அ.மகேஸ்வரன், 30.04.2024-லும் ஆங்கிலத்துறைத்தலைவர் முனைவர்.சி.முனியாண்டி, வேதியியல்துறைத்தலைவர் திரு.ஆர்.குமரராஜன் ஆகியோர் 31.05.2024-லும் மற்றும்

கல்லூரியின் தேர்வு நிலை ஆய்வுக் கூட உதவியாளர் திரு.பி.முருகன் என்பார் 30.06.2024-ல் ஓய்வு பெற உள்ளனர்.

## நன்றியுரை:

**உலையில்லா வீட்டின் ஏழைச்சிறுவரும்**
**கலை பயில வாய்ப்பு தந்த**

எங்கள் தாய்ச் சங்கமாம் ஏல விவசாய சங்கத்தையும் கலைக்காக கல்லூரியும் தொடங்கி, அதன் உயர்வுக்காக ஓயாமல் உழைத்து வரும் போடிநாயக்கனூர் ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி தலைவர், துணைத்தலைவர், செயலர் மற்றும் தாளாளர், ஆட்சிக்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகைப் புரிந்திருக்கும் கல்லூரியின் தலைவர் திரு.எஸ்.வி.சுப்பிரமணியன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களின் கல்வி, கலை மற்றும் விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள், சுழற்கோப்பைகள் மற்றும் நிதி உதவிகள் வழங்கிய நமது கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அறக்கட்டளைகளை நிறுவியுள்ள அருளாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரியின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் நிதி உதவி வழங்கிய பல்கலைக் கழக மானியக் குழு (UGC) DST, New Delhi, CSIR, New Delhi DRDO New Delhi, TNSCST Chennai ஆகிய நிறுவனங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரியின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு கல்லூரிக்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் உடனுக்குடன் நல்கி வரும் நமது பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர், கல்லூரி வளர்ச்சிக்குழுத் தலைவர் மற்றும் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கின்ற சென்னை கல்லூரிக் கல்வி இயக்குனர் மற்றும் மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குனர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரி சிறப்புடன் செயல்பட அயராது உழைத்து வரும் துணைமுதல்வர், பேராசிரியர்கள், கண்காணிப்பாளர் (பொ) அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள், ஊடக அன்பர்களுக்கும் மற்றும் கல்லூரி நலன் பேணும் பெரியோர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி! வணக்கம்**

**டாக்டர். எஸ். சிவக்குமார், Ph.D.,**
**முதல்வர்**
**போடிநாயக்கனூர்**